நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி - 9
தொகுதி - 111
திருவள்ளுவர் ஆண்டு - 2048

திங்கள் இதழ்
விலை ரூ. 20
செப்டம்பர்- 2017




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறிஞர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

## செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | உறுப்பினர் |
| பொறிஞர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறிஞர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| முனைவர். க.சந்திரசேகரன் பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். சு.விஜயன் முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். கி.வேணுகா துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. இதழ் மணம் 4

2. சிலப்பதிகாரப் புதையல்கள் மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு 6
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

3. இராமானுசரும் தமிழும (சென்ற இதழின் தொடர்ச்சி)
பேராசிரியர் ப.மருதநாயகம் 12

4. உவமக்கிளவி
பேராசிரியர் செ.வை.சண்முகம் 20

5. காலம் தவறாமை
பேராசிரியர் மு.மணிவேல் 27

6. ஒபபிலக்கியமும் மொழிபெயர்பபும்
முனைவர் உ.கருப்பத்தேவன் 29

7. சங்கச் செய்திகள் 40



வலைதளம்: www.maduraitamilsangam.com
: www.senthamilcollege.com
மின்னஞ்சல்: maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

வாழ்க்கை இருவேறு இயல்புடையதாக அமைந்துள்ளது. இயற்கை இயங்காற்றல் மிக்க சிந்தனைப் பின்புலத்தோடு மக்களை இயக்கும் அறிவு உலகம், கல்வி, இலக்கியம், நாடகம், கூத்து, இசை இன்னோரன்னவற்றைப் படைக்கின்ற நிறுவனங்கள் வழி மக்கள் வாழ்க்கையைச் செப்பம் செய்கிறது. வளர்நிலைக்கும் எடுத்துச் செல்கிறது. அது அறிவு உலகத்தின் கடப்பாடு ஆகும்.

இக்கலை வடிவங்களைக் கொண்டு மக்களினத்தை கேளிக்கைக் களியாட்டங்கள் வழி மக்கள் அறிவு, பொருளியல், பண்பு, ஒழுக்கம் ஆகியவற்றைச் சிதைத்து ஆட்டு மந்தைகளாக்கும் வணிகர்கள் நடத்தும் ஊடகக் கலை வடிவங்கள வேறு.

முன்னது அறிஞர் உலகம்; அது மக்கள் உழைப்பு அறிவு, உற்பத்தி ஆகியவற்றைக் கடையனும் கடைத்தேறும் வகையில் பகிர்ந்து சென்றடையச் செய்வது. பின்னது வணிகப் பெருமக்கள், இடைத்தரகர்கள் தங்கள் வாழ்வுப் பெருக்கத்திற்காகக் கலை வடிவங்களையும் அனைத்து அறிவு சால் நிறுவனங்களையும் தங்கள் ஆளுமையின் கீழ் வைத்து சமுதாயத்தைத் தங்கள் விருப்பப்படி ஆட்டிப் படைப்பது இம்மாயத்துள் உலகம் சிக்கியுள்ளது. அதிலிருந்து விடுதலை பெற்று பொருள் நசையின்றி அறிஞர் உலகம் தம் கடமையைச் செய்கிறது

பல ஆயிரம் ஆண்டுகளாகத் தோன்றி வளர்ந்த இலக்கியம் வழி வழியாக ஆசிரியர் மாணவர் திண்ணைப் பள்ளியில் அமர்ந்து பனை ஒலையில் எழுதிப் படித்துப் பாதுகாத்து வந்தவை. அவர்கள் தங்கள் கல்வி, அறிவு, சிந்தனையை வளர்த்துக் கொண்டனர்; அறிவு தேக்கம் உடையதல்ல; அது இயற்கை இயங்காற்றல் உடையது; அதனால் வள்ளுவர் *"அறிதோறும் அறியாமை கண்டற்றால்"* என்றும், என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்றும் அதன் இயக்கத்தை அறிவுறுத்துவார்

பேராசிரியர் இளங்குமரனாரும், பேராசிரியர் ப மருதநாயகமும் பேராசிரியர் செ.வை.சண்முகமும் எழுதியுள்ள கட்டுரைகள் தமிழ் இலக்கியச் சிந்தனை, தேக்கமடையால் புதிய கருத்துருப்பெற்று மிளிர்வதைப் படித்து உணர முடிகிறது.

பேராசிரியர் இளங்குமரனார், *"களியாட்டம் ஆடிக் கண்டவாறு பொழுதைக் கழித்துத் திரிவோர் உளரேல் அவர் அறவகையால் கடப்பாடு ஆற்றுதலைத் துறந்தோராதல் வேண்டும்"* என்னும் இத்தொடர் இன்றைய சமுதாய அவலத்தையும் அவர்களை களியாட்டத்தில் இட்டுச் செல்லும் ஊடகங்களையும் இனம் காட்டுகிறது. இவ்வகை இலக்கியங்களும், நாடகங்களும், ஊடகங்களும் திரைக்காட்சிகளும் மக்களினத்தை சிதிலமுறச் செய்யும் மாபெரும் குற்றத்தைச் செய்து வருகின்றன. அறிவுடைய

சமுதாயத்தை இத்தகைய கேளிக்கை வடிவங்கள் கவர முடிவதில்லை; அறியாமையால் வறுமையில் ஒய்ந்து கிடக்கின்ற பெருங்கூட்டத்தை மீளமுடியாமல் பெருமுதல் வாணிக முதலீட்டாளர்கள் தங்கள் சந்தைப் பொருள் வாணிகத்திற்காக இவ்வூடகங்களைப் பயன்படுத்துவது வெளிப்படை

இத்தகைய சூழலில் பேராசிரியர்கள் சிலப்பதிகாரம், இராமானுசரின் தமிழ் இலக்கியப் பங்களிப்பு, தொல்காப்பியத்தில் உவமக்கிளவி குறித்து மிக விரிவான சிந்தனைத் தளத்தில் நின்று சிந்தித்திருக்கிறார்கள். பண்டையோர் மொழியில் சொன்னால் *"ஒவ்வொரு அச்சரமும் பொன் பெறும்."*

பேராசிரியர் மருதநாயகம் தமிழ் இலக்கியத்தில் இராமானுசர் நெஞ்சம் தோய்ந்திருப்பதை பல்வேறு நிலைகளில் எடுத்து விளக்கியுள்ளார். பெரிய நம்பியின் மகள் அதுழையின் வளையல் ஒலியுள்ளும், *"வளர்த்ததனால் பயன்பெற்றேன்"* என்ற சொற்கள் அனந்த ஆண்பிள்ளையுள்ளும் நெஞ்சு விம்மிதம் அடைய இராமானுசர் தமிழ் இலக்கிய ரசனை உடையவராக விளங்கினார் என்று பேராசிரியர் மருதநாயகம் எழுதும் நடை, நயம் இலக்கியச் சுவைஞர்கள் கற்று இன்புறத்தக்கது இராமானுசர் தமிழ் நிலம் கடந்த வடபகுதியில் மெய்ப்பொருட் செய்திகளை விளக்குதற்கு வடமொழியைப் பயன்படுத்தி அதனுள்ளும் தமிழ் இலக்கியம் அவரை ஆட்கொண்டிருப்பதை ஆசிரியர் எடுத்துரைக்கும் செய்தி கற்று இன்புறத்தக்கது.

பேராசிரியர் செ.வை.சண்முகம் தொல்காப்பிய சுவைஞர்; தொல்காப்பியத்தின் ஒவ்வொரு சொல்லும் பேராசிரியர் நெஞ்சுள்ளும் மூளை அணுக்களுள்ளும் பதிந்து அவரை இன்புறுத்துகின்றன அதன் வெளிப்பாடு அவர்கள் தொல்காப்பியம் குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் பேராசிரியர்கள் சிந்தித்தவற்றை திறம்பட ஆய்ந்து அதன் வன்மை மென்மைகளை ஆசிரியர் மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் பரோபகாரம் நன்றி பாராட்டத்தக்கது. இப்பெருமக்களுடைய கட்டுரைகளை மாணவர்கள் ஆசிரியர்கள் பலமுறை படித்துப் பயன் பெறலாம். படியாதவர்களையும் படிக்க வைக்கலாம்

பேராசிரியர் மு.மணிவேல் கட்டுரை எழுதுவதில் உள்ள சிறப்பு, கட்டுரையைச் சிறுகதை போல நயம் பட எழுதுவதாகும். கட்டுரை சிறிதாயினும் பயனும் இன்பமும் அளிப்பது.

பேராசிரியர் உ.கருப்பத்தேவன், மதுரைப் பல்கலைக்கழக ஒப்பிலக்கியத்துறைப் பேராசிரியர்; இவருடைய கட்டுரையில் எடுத்துக் கொண்ட பொருள் முழுமையாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும். மொழி பெயர்ப்புத்துறை ஒப்பிலக்கிய வாசிப்பிற்கு பணிபுரியும் பல்வேறு கூறுகளை ஆய்வு செய்துள்ளார் உலகம் முழுவதும் ஒப்பிலக்கியப் பணியும் மொழிபெயர்ப்பு ஆக்கமும் நடைபெறுவதை தொகுத்து அளித்துள்ளதோடு இது குறித்து ஆய்வாளர்களும் மாணவர்களும் ஆற்ற வேண்டிய பணியையும் சுட்டி கட்டுரையை நிறைவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## 5 மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

விட்டுக் கொடுத்து விளங்கச் செய்யும் நெகிழ்ச்சி எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவை கட்டுக்குலையா உளத்துடன் இருந்து கவின் பெறுதல் என்பதாம். வாழ்வு நடக்க உள்ள நெகிழ்வும், வாழ்வு சிறக்க உள்ளச் செறிவும் வேண்டத்தக்கனவாகலின் நெகிழ்வுடைய மழையை முற்கூறி வாழ்த்தி, செறிவுடைய நிலத்தினைப் பிற்கூறி வாழ்த்தினார் என்று ஏற்படுகின்றது.

அன்றியும், ஐம்பெரும் பூதங்களிலே கட்புலனாம் தன்மையன மூன்றாம் அவை; தீ, நீர், நிலம். இவற்றுள் தீ மூன்று தன்மைகளையும், நீர் நான்கு தன்மைகளையும், நிலம் ஐந்து தன்மைகளையும் பெற்றிலங்குவது எவரும் அறிந்ததே. விண்ணுக்கு ஒலியும், காற்றுக்கு ஒலியுடன் ஊறும், தீயிற்கு ஒலி, ஊறுகளுடன் ஒளியும், நீருக்கு ஒலி, ஊறு, ஒளிகளுடன் சுவையும், நிலத்திற்கு ஒலி, ஊறு, ஒளி, சுவைகளுடன் மணமும் உண்டு. இத்தன்மைகள் இவற்றுக்கு உளவாதலை விளக்கமாக இரண்டாம், மூன்றாம் ***பரிபாடல்கள்*** கூறுவது காண்க

***முப்பண்புகளையுடைய*** ஒளியை வாழ்த்தி, நாற்பண்புகளையுடைய ***மாமழையைப்*** போற்றி, ஐந்து பண்புகளையுடைய ***மாநிலத்தை ஏத்தி*** வரன் முறையாக்கிக் கொண்டுள்ளார் அடிகள் என்றாகின்றது.

திருமணத்திற்கும் ஐம்பெரும் பூதப்பண்புகளுக்கும் தொடர்பு என்ன எனில் காண்போம் ஐம்பூதங்களின் மயக்கமே உடல். மாந்தர் உடலின் கால்பகுதியில் நிலத்தன்மையும், குடல் பகுதியில் நீர்த்தன்மையும், மார்புப் பகுதியில் நெருப்புத்தன்மையும், கழுத்துப் பகுதியில் வளித்தன்மையும், தலைப்பகுதியில் விண் தன்மையும் சிறப்பு நிலை பெற்றுத் திகழ்ந்து, பூதங்களின் மயக்கமே உடல் என்பதைத் தெளியக் காட்டும் ஐம்பூத மயக்கமாம் உடலில் ஐம்பூத இயல்பும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) செறிந்திருத்தல் தானே இயல்பு. இவ்வியல்பினை வளர்க்குமாறும், சிறக்கச் செய்யுமாறும் அன்றோ வாழ்க்கை அமைப்பு இருத்தல் வேண்டும்! இவ்வியல்புகளை வளர்க்குமாறு வாழ்க்கை உளதா? மணவாழ்க்கை உளதா?

*"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள"* என்று வள்ளுவர் பேசிய பின் *'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்'* ஐந்தென அவர் வகுத்துக் காட்டியபின் பெண்மையினிடத்தே ஐம்புலவின்பமும் அமைந்துள்ளது எனல் தேவையற்ற ஒன்று.

மாந்தர் எவருக்கும் உரியதாம் சுவை நிலைக்களத்தைச் சுட்டிக் காட்டினார் அறநூலார். அஃது அவர்க்கு இயல்பு ஆனால் அடிகளோ தம் காவியச் சிறப்புக்கேற்ப மணவாழ்வின் செறிநிலை இன்பத்தை

உரைக்கின்றார் கோவலன் வாயிலாகக் கண்ணகியைப் பாராடடு முகத்தான்!

மனையறம் புகுந்து மங்கல அமளியிலே இருக்கும் கண்ணகியை

*"மாசறு பொன்னே வலம்புரி முத்தே*
*காசறு விரையே கரும்பே தேனே"*

என்று பாராட்டுகின்றான். இப்புகழ் உரையிலே ***ஐம்புலச் சுவையும் உளவாதலை*** "கட்கு இனிமையான் மாசறவோடிய பொன்னை ஒப்பாய், ஊற்றின் இன்பத்தான் முத்தை ஒப்பாய், உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒபபாய், சுவையின் இனிமையால் கரும்பை ஒப்பாய், இனிய மொழியை உடைமையால் தேனை ஒப்பாய் என்றும், இவற்றைச் சொல்லியது ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகலின் *"கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள"* என நலம் பாராட்டப்பட்டன என்றும், ***அடியார்க்கு நல்லார்*** பொருளும் விளக்கமும், எழுதிச் செல்வது அவரது புலமையை விளக்கா நிற்கும்.

மணம் மலருக்கு இயற்கை! மலர் தோன்றும் இடம் மண் மண்ணின் தனிச் சிறப்புத் தன்மை மணம் மணம் செறிந்து கூடி நிற்குமிடம் மலர். ஆதலால் மலருக்கு மணம் இயல்பாகிவிட்டது. மணமில்லா மலரை மலரென மதிப்பதும் வழக்கில் இல்லை.

இம்மலர்களைப் போலவே மக்களையும் மலர் எனக் கொண்டது தண்டமிழ் உலகம். *'அவன் அரும்பினான்'* என்று பேசும் வழக்கு ஆண் ஒரு மலர் என்பதை மெய்ம்மைப்படுத்தும். *'அவள் பூப்படைந்தாள்'* என்னும் நடைமுறை பெண் ஒரு மலர் என்பதை உறுதிப்படுத்தும். அரும்புதலும், பூத்தலும் மலருக்குத் தானே உண்டு! அரும்பிய ஒன்று மணம் பரப்பாதிருப்பின் பயன் என்ன? மணத்தின் பிறப்பிடமாம் மண்ணிடைத் தோன்றியதன் பயன் தான் என்ன? மலரில் மணம் இருத்தல் இயற்கை போலவே மாந்தர் மணம் செய்து இன்புற்று வாழ்தலும் இயற்கை! மாற்று வழிகள் இயற்கையல்லா வழிகள் செயற்கை வழிகள். மணத்திற்கு உறையுளாம் மண்ணை வாழ்த்துவதும், மலரையும் மணத்தையும் பெருக்கும் மழையை (ஐங்குறு 328) வாழ்த்துவதும் இயற்கை வாழ்த்தாம்.

மழை என்னும் சொல்லுக்கு *'இன்பம்'* என்னும் பொருள் உளதாதலைப் ***பெருந் தொகை*** மழைநாள் நமக்கு எனக் காட்டும் (2200–2) இன்பப் பொருளாம் மழையை வாழ்த்துதல் இன்ப வாழ்த்தாக, மங்கல வாழ்த்தாக அமைதல் நோக்கத்தக்கது.

திங்கள், ஞாயிறு, மழை எனப் பொதுமை வாழ்த்துக் கூறிய அடிகள் *"மாநிலம் போற்றுதும்"* என்றோ *"நானிலம் போற்றுதும்"* என்றோ கூறாது *"பூம்புகார் போற்றுதும்"* எனச் சிறப்பு முறைமையால் கூறினாரே, ஏன் எனில் அதன் காரணம் வெளிப்படையாகவே அறியக் கிடக்கின்றது.

புகார் *"பொதுவறு சிறப்பிற் புகார்"* என்று அடிகளாலேயே குறிக்கப்படுவது ஆகலானும், காவியத் தலைவன் தலைவியர் தோன்றிய

இடம் புகார் ஆகலானும், தாம் எடுத்துக் கொண்டு பாடப் புகுந்த பகுதி புகார்க் காண்டம் ஆகலானும், மூவேந்தரையும் ஒப்பமதிக்கும் உளநலம் அடிகட்கு உண்டு ஆகலானும், வாழ்த்துக்கும் வரலாற்றுக்கும் தொடர்பு காட்ட வேண்டிய இடம் அஃது ஆகலானும் *"பூம்புகார் போற்றுதும்"* என்று போற்றினார் என்க.

இங்குக் காட்டிய அனைத்தும் திங்கள், ஞாயிறு, மழை, புகார் என வரன்முறை கொண்டமைக்காகக் கண்ட குறிப்புக்களாம். இனி இவ்வாழ்த்திலே அடங்கியுள்ள அறநெறிக் கூறுகள் சிலவற்றைக் காண்போம்.

அருள் செய்தலும், அறங்காத்தலும், கொடைபுரிதலும், குடிதழுவலும், செங்கோல் வேந்தர்களது கடமைகளாம் இவற்றைக் கடமைகளாகக் கொண்டிருக்குமாற்றைத் தமக்கும் பிறருக்கும் அறிவிக்குமாறே குடையையும் திகிரியையும் கருவிகளாகக் கொண்டனர். கொடையையும் குடியோம்பலையும் குணங்களாகக் கொண்டனர்.

பொறுப்பு மிகக் கொண்டு கடனாற்றுவோர் வாழ்வில் களிப்புக்கு இடம் குறைவே. நேரிடைக் களிப்பும் அவர்கட்கு வாய்ப்பது இல்லை. தம் கடனாற்றலால் பிறர் வாழ்வில் இன்பம் மல்கிற்றேல் அவரின்பம் நோக்கி இவரின்பங் கொள்வர். அதுவே இவர் பெறும் இன்பமாம். அன்றிக் களியாட்டம் ஆடிக் கண்டவாறு பொழுதைக் கழித்துத் திரிவோர் உளரேல் அவர் அறவகையால் கடப்பாடு ஆற்றுதலைத் துறந்தோராதல் வேண்டும். ஆயின் மக்களை உயிரெனக் கருதும் மன்னவன் வாழ்வு வெளித் தோற்றத்திற்குப் பல்வேறு நலங்கள் கனிந்ததாக இலங்கினாலும் உள்நோக்கி அறிவார்க்கு இன்னல் பல பயப்பதே என்பது தெளிவாகும். இதனாலே *"பொன்முடியன்று மன்னவன் சூடுவது முண்முடியே"* என்று மொழிந்தோரும் உளர்

இளங்கோவடிகளார் வடவாரியர் படை கடக்க நிற்கும் அண்ணன் வாயிலாக,

> ***"மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல்***
> ***துன்ப மல்லது தொழுதக வில்"***

என்று திட்டவட்டமாய் உரைத்து, மழை உரிய காலத்தில் பெய்யாவிட்டாலும், மக்கள் பல்வேறு துயர்கட்கு ஆட்பட்டாலும் உலகம் மன்னனையே பழிக்கும்; ஆகலின் மன்னவர் நன்குடிப்பிறத்தல் துன்பந்தருவதே அன்றி இன்பஞ் செய்வது இல்லை என்று வற்புறுத்துகிறார்.

செங்கோல் மன்னனுக்குத் தன்னுயிர் என் ஒன்றில்லை. மக்களே அவன் உயிர். அவ்வாறாயின் மக்களாம் உயிர்க்குத் துயர் வருமாயின் அத்துயர் நேரிய மன்னனைக் கூரிய வாள் போல் வாட்டுதல் உறுதி.

மன்னுதல் என்னுஞ் சொல்லுக்கு நிலை பெறுதல் என்பது பொருளாம். உலகில் நிலைபெற்றவனே மன்னவன் ஆவான். அரசு ஏற்றவர் அனைவரும் அரசர் ஆகலாம் ஆனால் உலக ஏட்டில் மன்னினோர் அன்றி

மற்றையோர் மன்னவர் ஆகார். இவ்வுலகம் நிலையிலாத் தன்மையுடையது. நிலையிலா உலகில் நிலைப்பதும் எளிதோ? எல்லோருக்கும் கூடுவதோ? சிலர்க்கே கைகூடும்! கூடுதற்கும் வழிவகை வேண்டும்.

நிலையிலா உலகில் நிலைக்க வேண்டுமாயின் புகழ்மிக்க செயல்களைச் செய்தாக வேண்டும். புகழ் ஒன்றே அழியாதது. *"ஒன்றா உலகத்துயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்"* என்றார் அறநெறி அண்ணல். *"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத்தாமாய்ந்தனர்"* என்றார் புறநானூற்றுப் புலவர். புகழால் நிலைக்குமொன்றே புவியாள்வோர் கடனாம்.

புகழ்க் கோயிலுக்குப் புகுவாயில்கள் எத்துணை? ஒன்றா இரண்டா? பலப்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நான்காம். அவை ***கொடை, அளி, செங்கோல், குடியோம்பல்*** என்பவை.

*"அடுக்கிய மூவுலகும் கேட்குமே கொடுத்தார் எனப்படுஞ்சொல்"* என்று கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின்றது நாலடி. "பொருள் அற்றார் அப்பொருளை முயற்சியால் மீண்டும் பெறக் கூடும்; ஆனால் அருள் அற்றார், அருளை மட்டுமோ அற்றார்? அனைத்தும் அற்றார்" என்கின்றது குறள். *"கொடும்புலி வாழும் காட்டினும் கொடிது கொடுங்கோல் மன்னர் வாழும் நாடு"* என்று கூறிச் செங்கோலின் இன்றியமையாமையை வற்புறுத்துகின்றது பிற்கால நூல். "மன்னவ! வெயில் மறைக்குமாறு பிடிக்கப் பெற்றதோ நின் வெண்குடை? குடிகளைக் காத்தற்காக அன்றோ எடுக்கப்பட்டது" என்று பன்னுகின்றது தொன்மை நூல். இவ்வனைத்தையும் இறைமாட்சியிலே,

***"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்***
***உடையானாம் வேந்தர்க் கொளி"***

என்று தொகுத்துரைக்கின்றார் பொய்யில் புலவர். கண்ணாகிய உறுப்பு இருந்தும் அதனிடை அருள் வரப்பெறார் கண்ணுடையர் ஆகார். அதுபோல் அரசுப் பொறுப்பு இருந்தும் இந்நான்கு பண்புகளும் இல்லார் அரசர் ஆகார்; உடையரே அரசர்; அரசருள் ஒளியுடைய (புகழுடைய) அரசர். ஆகலின் தகை மாண்ட புகழ்க் கோயிலுக்குச் செல்லும் வகை மாண்ட வாயில்கள் பலவற்றுள்ளும் கொடையளி செங்கோல் குடியோம்பல் என்னும் நான்கும் நற்கலை கவினிய பொற்புறு கோபுர வாயில்கள் எனல் தகும். இனி, இதற்கும் சிலப்பதிகார மங்கல வாழ்த்திற்கும் உரிய தொடர்பென்ன எனில் காண்போம்.

*"முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய தொடர்நிலைக் காவியத்தை அடிகள் பாடவேண்டு"* மென்று தண்டமிழ்ச் சாத்தன் வேண்டிக் கொண்டதற்கு ஏற்பச் சிலம்பு பாடும் சேரர் வழிவரும் அடிகள் வேந்தருக்கு ஒளியாம் வழிகளைத் தெளிய உரைத்துப் போதுகின்றார். அவர் தம் காவியத்தில் பல இடங்களில் அவ்வாறு உரைக்கினும் தலையாய இடம் மங்கல வாழ்த்தாகவே புலப்படுகின்றது.

"யாம் திங்களைப் போற்றுவோம்–சோழனது வெண்குடை போன்று ***தண்ணளி செய்தலால்;*** யாம் ஞாயிறு போற்றுவோம்–சோழனது ***திகிரிபோல்*** (சக்கரம்) மேரு மலையை வலஞ் சுற்றி வருதலால்; யாம் மாமழையைப் போற்றுவோம்–***சோழன் அருள் போல்*** பொழிந்து வளம் பெருக்குதலால்; யாம் பூம்புகார் போற்றுவோம்–சோழன் ***குலத்துடன் தோன்றி உயர்ந்து*** விளங்குதலால்; என்பதனை,

*"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்*
*வங்க ணுலகளித்த லான்"*

*"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலந்திரித லான்"*

*"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்*
*மேனின்று தான் சுரத்த லான்"*

*"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்*
*வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ*
*டோங்கிப் பரந்தொழுக லான்."*

என்று இசைநலம் பொலியப் பாடுகின்றார் அடிகள். இப்பாடல்களிலே திங்களால் குடிக்கு நிழலாம் அளியும், ஞாயிற்றால் செங்கோலாம் ஆளுமையும், மழையால் வளஞ்சுரக்கும் கொடையும், பூம்புகாரால் குடியோம்பலும் குறிக்கப் பெற்றமை ஊன்றி உணர்வார்க்குத் தெளிவாகாமற் போகா.

அரசர்க்கென்று அறநூல் வகுப்பனவற்றையே தாமும் கூறுவான் எடுத்துக் கொண்ட அடிகள் நூலின் தொடக்கப் பகுதியிலேயே இயற்கை வாழ்த்துரைக்கு முகத்தான் இவற்றை இனிதின் ஓதுகின்றார். தொடக்கமும் முடிவும் எவருள்ளத்தையும் எளிதில் ஈர்த்து நிலை பெறுத்தும் பெற்றி கொண்டிலங்குவனவாம். ஆதலின் அரச நெறி முறையறிந்து நூல் தொடங்கும் அடிகள் மாந்தர் நல்வாழ்வுக்குரியனவாம் பொருளறங்களை விரித்துக் கூறும் வரந்தருகாதையுடன் காப்பியத்தை முடிக்கின்றார்.

மங்கல வாழ்த்துப் பகுதியில் கூறும் குறிப்புரைகளை நூலினகத்து விரித்தும் விளக்கியும் செல்வது அடிகட்கு இயல்பாதலை நூலினை மேற்போக்காக நோக்குவோரும் உணர்வர் என்பது ஒருதலை

திங்களை வெண் கொற்றக்குடையுடன் இணைத்த அடிகள் *"தண்மதி யன்ன தமனிய வெண்குடை"* (28.1–2) என்று வடிவுக்கும், மண்குளிரச் செய்யும் தண்குடை (19.21) என்று பண்புக்கும் ஒப்புமை காட்டியுள்ளார்.

ஞாயிற்றைச் செங்கோல் சிறக்கச் செய்யும் அறத்திகிரியுடன் ஒப்பிட்டுக் காட்டும் அடிகள் *"விரிகதிர் பரப்பி உலக முழு தாண்ட ஒரு தனித்திகிரி உரவோன்"* (2·1–2) என்று வடிவுக்கும் *"பொற்கோட்டுழையதா எப்பாலும், செருமிகு சினவேற் செம்பியன் ஒரு தனியாழி"* என்று தொழிலுக்கும் உவமை காட்டியுள்ளார்.

மழையினைக் கொடையுடன் ஒப்பிடும் அடிகள், சோழன் கொடைச் சிறப்பையும், சேரன் கொடை மாண்பையும் கேட்போர் நயப்பும் வியப்பும் ஒருங்கெய்தக் கூறுவதே அன்றி, *"மன்னவர் பின்னோர்"* என்று குறிக்கப்படும் வணிகருள் உயர்ந்தோங்கிய மாநாய்கன் *"மாகவான் நிகர்வண்கையன்"* என்றும், கோவலனைச் *"செம்பொன் மாரி கொள்கையிற் பொழிந்தோன்"* (15:41) என்றும் கூறுகின்றார்

குலந்தொடங்கிப் பரந்தொழுகும் நிலச் சிறப்பினைக் கூறும் அடிகள் *"பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய பொதுவறு சிறப்பிற் புகார்"* (1:15–6) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவற்றை நோக்குங்கால் திங்களும், ஞாயிறும், மழையும், மண்ணும் தந்தொழில் திரியாத் தகைமையவாக் கடனாற்றினாலும் கொடையளி செங்கோல் குடியோம்பல் ஆகிய நான்கும் பேணாத அரசும், ஆட்சியும் கேடு பயப்பனவன்றி நன்மை பயவா என்றும், கோன் நிலைதிரியின் கோல் நிலை திரிந்து கோள் நிலையும் திரியும் என்றும், ஆளவோர் செம்மையால் தான் ஆட்சிக்கு உட்பட்டோருக்கு நலம் விளையும் என்றும் அடிகள் உணர்த்துகின்றார் என்றாதல் வேண்டும் அரசியல் பிழைத்தோரை அறம் கூற்றாக இருந்து மடியச் செய்யும் என்பது அடிகள் நூல் பாடுவான் புகுவித்த முப்பெருங்காரணங்களுள் ஒன்றன்றோ! இத்தகைய அடிகள் நூலின் தொடக்கத்திலேயே *"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"* என்று எண்ணுமாறு செய்வித்தல் ஏற்புடையதே என்று அறியலாம். ஆதலின் மங்கல வாழ்த்து, மன்னர் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளை வாழ்த்து முறையால் கூறும் பகுதி என்பது விளக்கமாகும்.

அடிகள் அறத்தை உயிரெனக் கொண்டவர். அறத்தின் வழியே அரசியல் இயங்க வேண்டும் என்று கருதுபவர், அவ்வாறு இயங்கினால் மாந்தரும் அறநெறி வழியே செல்வர் என்னும் அசையா உறுதி உடையவர்; அறத்தை நிலைபெறுத்துமாறும், மறத்தைக் கடிந்து ஒதுக்குமாறும் செய்தற்கு இலக்கியமே உயரிய கருவி என்று தெளிந்தவர். இவற்றுக்கு ஏற்ப ***அறவாழ்த்துப்பாடி*** நூலைத் தொடங்குகின்றார்.

"கோள் நிலை தவறாது! அப்படி ஒரோர் வேளை அது தவறு படினும் கோன்நிலை தவறவே கூடாது, தவறுமாறு நேரின் குற்றமற்ற கோவலன் போல்வோர் கொலைக்களம் குறுகி–மடிவர் என்று எதிர்கால உலகம் உணரவேண்டும்" என்று அறநெறி தவறியது பற்றி விவரிக்கும் காப்பியத்தின் தொடக்கத்தில் அறநெறியை அழகுபெற வைக்கின்றார் அடிகள்; உணர்வார்க்கு இன்பம் பயவாமற் போகாது அடிகளின் மங்கல வாழ்த்து!

பேராசிரியர். **ப.மருதநாயகம்,**
ஆய்வு அறிஞர், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்,
தரமணி, சென்னை–600 113
கைபேசி : 94427 87727
மின்னஞ்சல்:pmarudanayagam@yahoo com

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல்கள் அவர் சங்க அகப்புறப் பாடல்களில் ஆழங்கால் பட்டவர் என்பதற்கு நல்ல சான்றுகளாகும். புறப்பாடலில் வரும் போர் வருணனையை அவரது பாடலொன்றில் தெளிவாகப் பார்க்கலாம்.

*"மாறு நிரைத்து இரைக்கும் சரங்கள் இன*
*நூறு பிணம் மலைபோல் புரள, கடல்*
*ஆறு மடுத்து உதிரப் புனலா, அப்பன்*
*நீறுபட இலங்கை செற்ற நேரே!"* (3600)

சங்க ஆற்றுப்படைப் பாடல் கூறுகள் திருமாலிருஞ்சோலை மலை பற்றிய பாடல்களில் இடம்பெறும்.

*"திறம் உடை வலத்தால் தீவினை பெருக்காது*
*அறம் முயல் ஆழிப் படையவன் கோயில்*
*மறு இல் வண் சுனை சூழ் மாலிருஞ்சோலைப்*
*புறமலை சாரப்போவது கிறியே"* (3114)

கண்ணன் காட்டிய பெருவீரத்தைச் சுட்டும் நிகழ்ச்சிகளைப் புறப்பாடல் மரபில் பேசும் ஒரு நம்மாழ்வார் பாடலும் உண்டு.

*"ஏறேல் ஏழும் வென்று ஏர்கொள் இலங்கையை*
*நீறே செய்த நெடுஞ்சுடர்ச் சோதி*
*தேறேல் என்னை, உன் பொன் அடி சேர்த்து ஒல்லை*
*வேறே போக எஞ்ஞான்றும் விடலே"* (3108)

***திருவாய்மொழியின்*** மூன்றிலொரு பங்குப் பாடல்கள் சங்க அகப்பாடல் உத்திகளைக் கையாளும். நம்மாழ்வார் தம்மைத் தலைவியாகவோ, தலைவியின் தாயாகவோ, தோழியாகவோ பாவித்துத் திருமாலைத் தலைவனாக்கி அவன் அருளை வேண்டுவார். பாடாண்திணையின் புறமரபைப் போல், கைக்கிளைத் திணையின் அகமரபையும் பயன்படுத்திக் கொள்வார்

*"காமுற்ற கையறவோடு எல்லே இராப்பகல்*
*நீமுற்றக் கண்துயிலாய்; நெஞ்சு உருகி ஏங்குதியால்;*
*தீமுற்றத் தென் இலங்கை ஊட்டினான் தாள் நயந்த*
*யாம் உற்றது உற்றாயோ ? வாழி! கனைகடலே"* (3011)

*"வேவு ஆரா வேட்கைநோய் மெல் ஆவி உள் உலர்த்த*
*ஓவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்து ஒழிந்தாய்*
*மாவாய் பிளந்து மருதிடைபோய் மண் அளந்த*
*மூவாமுதல்வா! இனி எம்மைச் சோரேலே"* (3018)

திருமாலின் அருள்கிட்டாத போது தலைவனைப் பிரிந்து தலைவி வாடுவதைப் போன்று ஆழ்வார் துயருற்றுப் பேசுவார்

**குறுந்தொகையின்** அறுபத்தாறாம் பாடலில் கார்காலம் வந்த பின்னும் தலைவன் வராததால் வருந்திய தலைவியிடம் ''இம்மழை பருவமல்லாத காலத்துப் பெய்வது; இதைக் கார் காலத்துக்குரியதென்று கருதி மயங்கிய கொன்றை மரங்கள் மலர்ந்தன அதனால் இது கார்ப் பருவமென்று நினைத்து நீ வருந்தாதே'' என்று தோழி கூறுவாள். இப்பாடலை நம்மாழ்வார்,

*"மலர்ந்தே ஒழிந்தில-மாலையும் மாலைப்*
*பொன் வாசிகையும்*
*புலம் தோய் தழைப்பந்தர் தண்டு உற நாற்றி;*
*பொருகடல் சூழ்*
*நிலம் தாவிய எம்பெருமான்-தனது*
*வைகுந்தம் அன்னாய்*
*கலந்தார் வரவு எதிர் கொண்டு வான்*
*கொன்றைகள் கார்த் தனவே"* (திருவிருத்தம் 68)

(வைகுந்தத்தை ஒத்தவனே! கார் காலம் வராத பொழுது கொன்றை மரங்கள் கருவுற்று அரும்பத் தொடங்கினவே அன்றிப் பந்தலில் முழுதும் பூத்துக்குலுங்கவில்லை; இன்னும் கார் வரவில்லை ) என்று மாற்றம் செய்து தருவார். காமம் பக்தி ஆகிறது இதனைச் சுட்டிக் காட்டும் ஏ.கே.ராமானுஜன் ''அகப்பாடலில் முல்லைத் திணையின் இரங்கல் எனும் உரிப்பொருளுக்குரிய பூக்கும் மரம், மழை, ஏங்கிக் காத்திருக்கும் தலைவி ஆகிய யாவும் பக்திப் பாடலுக்கு இடமாற்றம் பெறுகின்றன'' என்று கூறுவார்.

இராமானுசரின் வருகைக்கு முன் பல ஆச்சாரியார்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கும் வடமொழி ஸ்ருதிகளுக்கும் ஒத்த உயர்வு அளிக்க வேண்டுமென்னும் உபய வேதாந்தக் கோட்பாட்டை மக்களிடையே பரப்புதற்குத் தம் பங்களிப்பைச் செய்தனர். நாதமுனிகள், யமுனாச்சார்யா, திருமலைநம்பி, திருமலை ஆண்டான் போன்ற ஆச்சாரியார்கள் ஆழ்வார்களின் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடல்கள் நிகழ்த்தினர். இராமானுசர் தமிழில் ஏதும் எழுதவில்லையாயினும் ஆழ்வார் பாடல்களின் உட்கிடக்கையை ஆய்ந்தறிந்து அவர்களுடைய அனுபவத்தை உணர்ந்து தமது வைணவத் தத்துவ விளக்கங்களில் பயன்படுத்திக் கொண்டார் என்பதை எம்.வரதராஜன் தமது "Unique Interpretations'' என்னும் கட்டுரையில் சான்றுகளோடு விளக்குவார். அழகிய மணவாளப் பெருமாள்

நாயனார் தமது **ஆச்சார்ய ஹிருதயத்தில்** *"திருவாய்மொழியின் உதவி கொண்டு இராமானுசர் பிரம்ம சூத்திரங்களை விளக்குவார்"* என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாம் வடமொழியில் இயற்றிய **நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வாழ்த்துக்** கவிதைகளில் இராமானுசர் ஆழ்வார்களையும், அவர்களுடைய பாடல்களையும் போற்றி வணங்குகிறார். குலசேகர ஆழ்வாரின் **பெருமாள் திருமொழிக்**கான வாழ்த்துப் பாடலில் ஒரு கிளியை விளித்து, திருவரங்கத்தின் பெருமையைப் பாடிப் பெருமானின் திருநாமச் சிறப்புரைத்த ஆழ்வாரின் பெயரைச் சொல்லுமாறு கேட்பார். திருமங்கை ஆழ்வாரின் **பெரிய திருமொழிக்**கான வாழ்த்துப் பாடலில் இராமானுசர் அவ்வாழ்வாரின் பண்புகளைச் சொல்லி அவரது அஞ்சாமையைப் பெரிதும் பாராட்டுவார். **பெரிய திருவந்தாதி**க்கான வாழ்த்துப் பாடலில் இராமானுசர் தமது மனத்திடம் நம்மாழ்வாரை நினைந்து, வந்தித்துப் போற்றுமாறு வேண்டுவார். இராமானுசரின் இவ்வடமொழிப் பாடல்கள் எல்லாம் தமிழ்க் கவிதை மரபில் அமைந்திருக்கக் காணலாம். நம்மாழ்வாருடைய பாடல்களுக்கு ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் இராமானுசர் புதிய விளக்கங்கள் தந்துள்ளமையை எம்.வரதராஜன் தெளிவாகச் சுட்டிக் காட்டுவார்.

திருவாய் மொழியின் முதற்பாடலில் நம்மாழ்வார் *"துயரறு சுடரடி தொழுது எழு என் மனமே"* என்று தமது நெஞ்சொடு கிளத்தலைச் செய்வார். இராமானுசருக்கு முன் வாழ்ந்த ஆச்சாரியார்கள் இறைவனின் திருவடிகள் அடியாரின் துன்பங்களைப் போக்க வேண்டுமென்று இவ்வடிக்கு உரை வரைந்திருந்தனர். இராமானுசரோ, இறைவனின் குடிமக்கள் பிறப்பு, இறப்பு எனும் சுழியில் அகப்பட்டு உழல்வது கண்டு வேதனையுற்ற இறைவன் தனது திருவடிகளால் அவர்களுடைய துயரைப் போக்கித் தனது வேதனையை நீக்கிக் கொண்டான் என்று பொருள் கூறுவார்.

***"அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண்***
***அன்பு செய்வித்து***
***அறியா மாமாயத்து அடியேனை***
***வைத்தாயால்***
***அறியாமைக்குறள் ஆய் நிலம் மாவலி***
***மூவடி என்று***
***அறியாமை வஞ்சித்தாய் எனது***
***ஆவியுள் கலந்தே"*** **(3033)**

இப்பாடலுக்குத் திருமலை ஆண்டான் மூலத்தின் சொல் வரிசையை உள்ளவாறு எடுத்துக் கொண்டு, "நான் அறியாமையில் இருந்த இளமைக் காலத்திலேயே உன்னிடம் அன்பு கொள்ளச் செய்து, அறியாமையாகிய மாயையில் என்னை வைத்திருந்தாய். நீ குறள் வடிவில் மாவலிமுன் மூன்றடி இரந்து வஞ்சித்தது போல் என் உயிருள்ளும் வந்து கலந்தாய்" என்று பொருள் கூறி வந்தார். இராமானுசரோ இவ்வாறு பொருள் கூறுவது

இறைவனைப் பழிப்பதாகும் என்றும் இப்பத்துப் பாடல்கள் இறைவனோடு ஆழ்வார் இரண்டறக் கலந்து பெற்ற இன்பத்தைக் கூறுவதால் இப்பொருளில் இப்பாடல் இடம் பெறுதல் முறையாகாதென்றும் சொல் வரிசையை மாற்றிப் பொருள் கூறுதலே சரியென்றும் அறிவுறுத்துவார்.

*"யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்*
*தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி*
*ஆவிசேர் உயிரின் உள்ளால் அது மோர் பற்றிலாத*
*பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே"* (3163)

உயிரற்ற பொருள்கள், உயிருள்ளவை ஆகிய யாவற்றுள்ளும் இறைவன் அந்தந்த நிலைகள் தோறும் கலந்து உள்ளுறையாக அவற்றை இயக்குகிறான். ஆனாலும் அவற்றுள்ளே தோய்ந்து விடாமல் அவற்றின் உணர்வுகளுக்குத் தலைவனாக இருக்கிறான். ஐம்புலன்களாலும் அறிய வொண்ணாதவனாக அறிவுருவாக உள்ளான். உடலில் உள்ள உயிர்க்கு வளர்தலும் குறைதலும் இல்லை. உயிரின் இன்ப துன்பங்கள் அவற்றுள் தங்கும் இறைவனுக்கு உண்டாதல் இல்லை.

இப்பாடல் இராமானுசருக்கு முன்னிருந்த ஆச்சாரியார்களால் பலவாறாக விளக்கப்பட்டது. "உடலின் இன்ப துன்பங்கள் ஆன்மாவைப் பாதிக்குமா? உடலில் இறைவன் தங்குவானானால் அவனை அவை தாக்குமா? இறைவன் எல்லாவற்றிலும் உறைகிறான் என்பதை உணர்ந்தாலே அவனை அடைய முடியுமா? இறைவனே மோட்சத்திற்கு வழி செய்பவன் என்பதை அறிந்தாலே அவனை அடைய முடியுமா? பக்தி மட்டுமே அவனிடம் ஒருவனைக் கொண்டு சேர்க்குமா?" என்பன போன்ற பல வினாக்கள் இப்பாடலால் எழுந்தன. இவற்றிற்கெல்லாம் இராமானுசர் தக்க விடைகள் தந்தார். அசையும் பொருள்களிலும் அசையாப் பொருள்களிலும் ஏற்படும் மாற்றங்கள் இறைவனிடம் எத்தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டா என்றும் உடலுக்கு ஏற்படும் ஊறுகள் ஆன்மாவை அண்டமாட்டா என்றும் இவ்வுண்மையை உணர்ந்தோர் இறைவனை அடைதல் கூடும் என்றும் இராமானுசர் தெளிவுபடுத்தினார்.

நம்மாழ்வார் ஒரு பாடலில் திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனுக்குத் தொண்டு செய்தால் ஒருவர் செய்த பாவங்களும் செய்யப் போகும் பாவங்களும் நீங்கப் பெறும் என்று கூறுவார். இக்கருத்தை இராமானுசர் நீண்ட தத்துவ விளக்கத்திற்கு உட்படுத்துவார். அறிந்து செய்பவை, அறியாமல் செய்பவை என்று பாவங்கள் இரண்டு வகைப்படும் என்றும் இறைவனைத் தியானிப்பதால் அவையிரண்டையும் விலக்கிக் கொள்ள முடியுமென்றும் இதனைப் பிரம்ம சூத்திரத்தால் தெரிந்து கொள்ளலாமென்றும் அறிவுறுத்தக் காணலாம். இங்கு ஆண்டாளின் "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்ற அடி நம் நினைவிற்கு வரும்.

*தோற்றம் கேடு அவை இல்லவன் உடையான் அவன் ஒரு மூர்த்தியாய்*
*சீற்றத்தோடு அருள் பெற்றவன் அடிக்கீழ்ப்புக நின்ற செங்கண்மால்*
*நாற்றம், தோற்றம், சுவை, ஒலி, உறல் ஆகி நின்ற எம்வானவர்*
*ஏற்றையே அன்றி மற்றொருவரை யான் இலேன் எழுமைக்குமே.* (3181)

இறைவன் தோற்றம், மறைவு ஆகிய இரண்டும் இல்லாதவன். ஆனால் ஆக்கலையும், அழித்தலையும் தன் உரிமைகளாகக் கொண்டவன். அவன் சீற்றத்தோடு நரசிம்மனாய் வெகுண்டெழுந்த காலத்தில் அவனது அருளுக்கு இலக்காகி, பிரகலாதன் அவனுடைய திருவடியைப் பற்றி உயர்நிலை பெற்றான். சிவந்த கண்களை உடைய திருமால் நாற்றம், வடிவம், சுவை, ஓசை, ஊறு எனப் புலன் நுகர்வுகளாகவும் உள்ளான். எழுமைக்கும் அவனே எனக்குத் துணையானவன்; வேறு யாரும் இல்லை

இப்பாடலைப் பயின்ற இராமானுசரின் சீடர்களில் ஒருவர் *சினந்திருந்த அரிமாவைப் பிரகலாதன் எபபடி அணுகியிருக்க முடியும் என்ற* வினாவை எழுப்பினார் என்றும் அதற்கு அப்பெரியவர் யானையொன்றைச் சிங்கம் தாக்கும் போதும் அச்சிங்கத்தின் குட்டி தாயின் அரவணைப்பைப் பெறாது போகாது என்று விடையளித்தாரென்றும் கூறுவார் வால்மீகியால் சொல்லப்படாத பிரகலாதன் கதை, கம்பரால் *"இரணிய வதைப் படலத்"*தில் எழுபது உயிரோட்டமுள்ள பாடல்களில் சொல்லப்படுகிறது. இரணியன், பிரகலாதன், நரசிம்மன் ஆகிய மூவரும் நம் நினைவிலிருந்து அகற்றமுடியாத பாத்திரங்களாக இச்சிறு படலத்தில் இடம் பெறுகின்றனர் இராமானுசர் அளித்த விடை பொருத்தமானது என்பதை இதனைப் படித்தோர் உணர்வர் இரணியன் தன் மைந்தனைச் சினந்து, "கும்பத்திண் கரியைக் கோள்மாக் கொன்றென நின்னைக் கொல்வேன்" என்று மிரட்டுகிறான். அவன் தன் கையால் ஒரு தூணை எற்றியவுடன் நரசிங்கம் தோன்றுகிறது. அதைக்கண்டவுடன் பிரகலாதன் அஞ்சவில்லை. மகிழ்வோடு "ஆடினான், அழுதான், பாடி அரற்றினான், சிரத்தில் செங்கை சூடினான், தொழுதான், ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி." இரணியனைக் கொன்றழித்த நரசிங்கத்தைக் கண்டு அஞ்சி நடுங்கும் தேவர்கள் அதனைத் தொழுது புகழ்கின்றனர். நரசிங்கம் பிரகலாதனை நோக்கி, *"நீ என்மேல் வைத்த அன்பிற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் ?"* என்று கேட்கிறது !

***"உந்தையை உன்முன் கொன்று, உடலைப் பிளந்து அளைய***
***சிந்தை தளராது, அறம் பிழையாச் செய்கையாய்!***
***அந்தமிலா அன்பு என்மேல் வைத்தாய்! அளியத்தாய்!***
***எந்தை! இனி இதற்குக் கைம்மாறு யாது? என்றான்"*** (6354)

பிரகலாதனுக்கு, "என்னைத் தொழுதேத்தி எய்தும் பயன் எய்தி, உன்னைத் தொழுதேத்தி உய்க, உலகு எல்லாம்" என்று வரம் அருளி, அவனை மூவுலகிற்கும் மன்னனாக முடிசூட்டுமாறு தேவர்களுக்கு ஆணையும் இடுகிறது அச்செங்கட்சீயம்

இராமானுசர் தமிழ்மேல் வைத்திருந்த பற்றை எ.கே.ராமானுஜம் "பாடல்களின் வழிச் சொல்லுதல்" (Saying it through Verses) எனும் ஆங்கிலக் கட்டுரையில் சான்றுகளோடு எடுத்துக் காட்டுவார். **இராமானுசரின் தமிழ்க் கையெழுத்து இன்றும் மேல் கோட்டையிலுள்ள கையெழுத்துப்பிரதி நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்** என்பார் அவர்.

''இராமானுசர் ***பிரம்மசூத்திரத்***தை நம்மாழ்வாரின் ***திருவாய் மொழி*** கொண்டே விளக்கினார்'' என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆச்சார்ய ஹிருதயத்தின் முதல் அத்தியாயத்தில் அறுபத்தைந்தாவது நூற்பாவில் குறிப்பிடுவது போன்று நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்குப் பிள்ளான், நஞ்சீயர், அழகிய மணவாளஜீயர், பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை ஆகியோர் எழுதிய விளக்கவுரை களிலெல்லாம் நம்மாழ்வாரின் பாடல்களைக் கொண்டே பிரம்மசூத்திரத்தை இராமானுசர் தெளிவுபடுத்தினார் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

இராமானுசரின் ***பிரம்மசூத்திர*** விளக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்தது ***திருவாய்மொழி***யின் ''உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்'' என்று தொடங்கும் முதற்பாடலே. இறைவன் நிறைகுணத்தவனே யென்றும் குணங்களற்றவனாக அவனைக் காண்பது தவறென்றும் தமது கோட்பாட்டை அவர் வரையறுத்துக்கொண்டு விசிஷ்டாத்துவைதத்தை முன் வைத்தார். அத்வைத, விசிஷ்டாத்துவைதக் கோட்பாடுகளுக்குள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டும் மாக்ஸ்முல்லர்

> ***The Brahman of Sankara is itself impersonal.***
> ***Sri Ramanuja's brahman is essentially a personal***
> ***God-the all-powerful and all-wise ruler***
> ***of the real world permeated and animated***
> ***by his spirit, the brahman is endowed with***
> ***all auspicious qualities-Saguna Brahman.***

என்றெழுதுவார். இறைவன் கருணையே வடிவானவன் என்றும் அடியார்களின் துயரைத் தீர்ப்பதிலேயே அவன் களிப்படைந்தான் என்றும் நம்மாழ்வார் கூறுவதை இராமானுசர் அவ்வாறே ஏற்றுக் கொண்டு, பிரம்மசூத்திரத்தை அவ்வொளியிலேயே கண்டு விள்க்கினார் என்பது தெளிவு.

திருவேங்கடமலைக்குச் சென்று இறைவனுக்குத் தொண்டு செய்ய யாரும் முன்வராத நிலையில் அனந்தாழ்வான் அது செய்ய விழைந்ததாகவும், அதனால் அவனை இராமானுசர் *'அனந்த ஆண் பிள்ளை'* என்று அழைத்ததாகவும், அவனும் அங்குச் சென்று இராமானுசர் பெயரில் பூந்தோட்டத்தையும் ஏரியையும் அமைத்ததாகவும் அவற்றைக் கண்டு மகிழ்ந்த இராமானுசர் 'வளர்த்ததனால் பயன் பெற்றேன்' என்று கூறி அவனை அணைத்துக் கொண்டதாகவும் உடையவர் வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி சொல்லப் பெறும். இத்தொடர் திருமங்கை ஆழ்வாரின் ***திருநெடுந்தாண்டகத்துப்*** பதினான்காம் பாசுரத்தில் வருவதாகும்.

*“முளைக்கதிரை, குறுங்குடியில் முகிலை, மூவா*
*மூவுலகுங கடந்தப்பால் முதலாய் நின்ற*
*அளப்பரிய ஆரமுதை அரங்கமேய*
*அந்தணனை அந்தணர்தம் சிந்தையானை*
*விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண்காவில்*
*வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு*
***வளர்த்ததனால் பயன் பெற்றேன்** வருகவென்று*
*மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே”*

என்பது அப்பாசுரம்

திருவாய்மொழியின் ஆறாம்பத்தின் இறுதிப் பகுதியில் வரும் திருவேங்கடம் உடையவனைச் சரணடைதல் பற்றிய பாடல்களே இராமானுசரின் ***கத்யத்ரய*** உருவாகத் தூண்டுகோலாயின என்பர்.

ஸ்ரீபாஷ்ய சூத்திரங்களுக்கு விளக்கம் சொல்லும் போது இராமானுசருக்கு இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு பற்றி ஓர் ஐயம் ஏற்பட்டதென்றும் அதனைத் தெளிவாக்கிக் கொள்ளத் திருக்கோட்டியூர் நம்பியிடம் தமது சீடரை அனுப்பினாரென்றும் திருக்கோட்டியூர் நம்பி இத்தொடர்பு தொண்டை அடிப்படையாகக் கொண்டதென்று ***திருவாய்மொழிப்*** பாடலைச் சான்று காட்டி விளக்கினாரென்றும் கூறுவர் இப்பாடல் வருமாறு;

***‘அடியேன் உள்ளான் உடல் உள்ளான் அண்டத்தகத்தான்புறத்துள்ளான்***
***படியே இதுவென்று உரைக்கலாம் படியன் அல்லன் பரம்பரன்***
***கடிசேர் நாற்றத் துள்ளாலை இன்பத் துன்பக் கழிநேர்மை***
***ஒடியா இன்பப் பெருமையோன் உணர்வில் உம்பர் ஒருவனே’***

இராமானுசர் மேல் கோட்டையிலிருந்த திருநாராயணனது சிலையைக் கண்டவுடன் பூதத்தாழ்வாரின்,

***பகல் கண்டேன், நாரணனைக் கண்டேன்; கனவில்***
***மிகக் கண்டேன் மீண்டு அவனை, மெய்யே மிகக்கண்டேன்***
***ஊன்திகழும் நேமி ஒளி திகழும் சேவடியான்***
***வான்திகழும் சோதி வடிவு*** (2262)

என்ற பாடலையும், *‘ஒரு நாயகமாய்’* என்று தொடங்கும் திருவாய்மொழிப் பாடல்களையும் பாடினார் என்பர் இப்பாடல்கள் இன்றும் புனர்வசு விழாவின் போதும் திருநாராயண ஜயந்தியின் போதும் மேல்கோட்டையில் பாடப்படுகின்றன திராவிட வேதபாராயணம் தொடங்குமுன் மதுரகவி ஆழ்வாரின் *“கண்ணிநுண் சிறுத்தாம்பு”* எனத் தொடங்கும்

நம்மாழ்வாரைப் போற்றும் பாடலைப் பாடுமாறு இராமானுசர் பணித்தார் என்றும் அது இன்றும் தொடர்கிறதென்றும் அறிகிறோம்

*"கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டு உண்ணப்*
*பண்ணிய பெரு மாயன் என் அப்பனில்*
*நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால்*
*அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே"* (937)

என்று நம்மாழ்வார் இப்பாடலில் புகழப்படுகிறார்.

திருவரங்கத்தில் வாழ்ந்த காலத்தில் இராமானுசர் வீடு வீடாகச் சென்று உணவு கொண்டபோது ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களைப் பாடிச் செல்வாரென்றும் ஒருமுறை *"உந்து மத களிற்றன்"* என்று தொடங்கும் பாடலைப் பாடியபோது பெரிய நம்பியின் மகளான அதுழை அவருக்கு அன்னமளிக்க வந்தாளென்றும் அவளது வளையல் ஒலிகேட்டு நப்பின்னையை நினைவு கூர்ந்து அவளுடைய காலடிகளில் விழுந்து வணங்கினாரென்றும் அவர் வரலாற்று நிகழ்ச்சியொன்றைக் கூறுவர்

*"உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்*
*நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்*
*கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்*
*வந்தெங்கும் கோழி அழைத்தன காண் மாதவிப்*
*பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள் கூவினகாண்*
*பந்தார்விரலி உன் மைத்துனன் பேர்பாட*
*செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப*
*வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"* (18)

இத்திருப்பாவைப் பாடலில் நப்பின்னை துயில் எழுப்பப் பெறுகிறாள்.

எழுத்திலே தமது கோட்பாடுகளை விளக்க வடமொழியைக் கையாண்ட இராமானுசர் பேச்சிலும், அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் தமிழையே பெரிதும் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவரது விசிஷ்டாத்துவைதக் கோட்பாட்டு உருவாக்கத்திலும் அதன் விளக்கங்களிலும் நம்மாழ்வார் பாடல்களின் தாக்கம் பெரிது. பாமரரிடம் அவருடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் அவர்களுடைய பக்தி உணர்வைத் தூண்டவும் ஆண்டாளுடைய ***திருப்பாவை*** அவருக்குத் துணை செய்திருக்கிறது.

# உவமக் கிளவி

பேராசிரியர். **செ.வை.சண்முகம்,**
பேராசிரியர் பணி நிறைவு, மொழியியல் புலம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
கைபேசி : 98651 96476

## 1. முன்னுரை :

உருபு என்பது பொதுவாக வழங்குவது மொழியியல் நோக்கில் இரண்டு பொருள் உடையதாகக் கொள்ளப்படுகிறது. அ) வேற்றுமை உருபு, கால உருபு போன்றவை தமக்கு எனப் பொருள் இல்லாமல் மொழியில் செயல்பாட்டு நோக்கில் பொருள் பெறுபவை, அவைகள்தான் உருபுகள் (Suffixes) என்று குறிப்பிடப்படும். ஆ) பொருள் உடைய சில சொற்களும் இலக்கண உருபாக (கொண்டு=மூன்றாம் வேற்றுமை, பொருட்டு=நாலாம் வேற்றுமை, உடைய=ஆறாம் வேற்றுமை) வழங்குபவை சொல்லுருபுகள் என்று குறிப்பிடப்படும்.

அந்த முறையில் உவமைக்கு 'இன்' என்பது உருபு என்றும்; அன்ன, போல என்பவை சொல் உருபுகள் என்றும் வேறுபடுத்தி வழங்குவது சிறப்பானது. தொல்காப்பியம் உவமைக்கு என்று தனி உருபு கூறாவிட்டாலும் சொல்லதிகாரத்தில் ஐந்தாம் வேற்றுமையாகக் கூறிய இன் உருபும் அதனுடைய வாக்கிய அமைப்பாகக் கூறிய 'இதனின் இற்று இது' என்பதும் உவமை மட்டுமே உரியவை. ஆனால் அடுத்த சூத்திரத்தில் தீர்தல், ஆக்கம், பற்றுவிடுதல் ஆகியவைகளையும் கொண்டுமுடியும் சொற்களாகக் கூறியுள்ளது அந்த வாக்கிய அமைப்புக்கு மாறுபட்டது. அதை உரையாசிரியர்கள் உணர்ந்து ஐந்தாம் வேற்றுமை பொரு(உவமை) நீக்கம், எல்லை, ஏது என்ற நாலு பொருள் உடையதாகப் பொதுமைப் படுத்தியுள்ளார்கள்

தொல்காப்பியமே எழுத்ததிகாரத்தில் 'அன்ன என்னும் உவமக் கிளவி' (210.1) என்று கூறியுள்ளதால் இங்கு 'உவமக் கிளவி' என்பது தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது

பொருளதிகாரத்தில் உவமவியலில் (11) கூறிய 36உம் சொல்லுருபுகளே. அவைகளில் 'அன்ன' என்பது அடங்கியுள்ளது. ஆனால் அவைகளுக்கு இலக்கண நோக்கில் பொதுப்பெயர் கொடுக்கவில்லை. அவைகளின் பகிர்வை விளக்கும்போது 'அன்ன என் கிளவி' (உவம.13) என்று ஒரு இடத்தில் கூறுவதால் சொல் என்று கருதுகிறார் என்பது தெளிவு இளம்பூரணரும் பேராசிரியரும் சொல் என்றே குறிப்பிட்டுள்ளார்கள்

மொழியியல் நோக்கில் சொல்லுருபு என்று கொள்வதே பொருந்தும். மாறாக உவமைப் பொருளை உணர்த்தும் 'இன்' என்பது உருபு என்று குறிப்பிடப்படும். உவமைக்குச் சொல்லுருபுகள் இருப்பது அவை சிறு நுண்ணிய பொருள் வேறுபாடு உடையது ஆகும்

உவமைக்குப் பல சொல்லுருபுகள் அமைந்துள்ளதும், உவமையை விளக்கும் நோக்கிலும், தொடரியல் அமைப்பு மாறுபடுவதும் உவமையியல் என்ற தனி இயலே அமைக்கக் காரணம் எனலாம்.

உவமைக்குப் பல உருபுகளைக் கையாளுவது மாற்றிலக்கண மொழியியலார் மொழி, மனித மூளையின் படைப்பாற்றல் என்று பொதுவாகக் கூறுவதற்கு இது ஒரு சான்று.

## உ. கிளவித் தொகை :

தொல்காப்பியம் 36 உவமச் சொல் உருபுகளை விளக்கும்போது 'அன்ன பிற' (11.14) என்ற தொடரைக் கையாண்டுள்ளதால் அதை ஒட்டி உரையாசிரியர் என்ற முறையில் இளம்பூரணர், நோக்க, நேர, அனை, அற்று, இன், ஏந்து, ஏர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்று இத் தொடக்கத்தன கொள்க என்று 12 புது சொல் உருபுகளைப் பட்டியலிட்டுள்ளார். பேராசிரியர் (11சூ உரை) பட்டியலிட்ட 12 சொல் உருபுகளில் இளம்பூரணர் உள்ளவைகளில் புதியனவும் விடுபட்டனவும் உள்ளன. இன், ஏந்து, சீர், ஆர ஆகியவை விடுபட்டு, துணைப்ப, மலைய, அமர, கெழுவ, என ஆகியவை பேராசிரியரால் சேர்க்கப்பட்டுள்ளன.

சீனிவாசன் (1973:74) தொல்காப்பியத்திலேயே 11ஆம் சூத்திரத்தில் பட்டியலிட்ட 36 சொல் உருபுகளோடு உவமையின் வகைகளை விளக்கும் சூத்திரங்களில் 2 உருபுகள் அதாவது அடுத்த சூத்திரத்தில் (12) நோக்க என்பதும், 16ஆம் சூத்திரத்தில் நேர என்பதும் குறிப்பிட்டுள்ளதால் மொத்தம் 38 உருபுகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார். மேலும் அவர் தொல்காப்பியம் கூறிய 14 சொல் உருபுகள் சங்க இலக்கியத்தில் பயிலவில்லை என்றும் தொல்காப்பியம் கூறாத 28 சொல் உருபுகள் சங்க இலக்கியத்தில் பயின்றுள்ளன என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்.

பேராசிரியர் (11) கூறிய 'உவமச்சொல்லின் வரம்பு இகந்தனவே' என்று ஓதி 'உரைப்ப' என்பது முற்கால அறிஞர்களே மொழியில் உவமையின் பரந்துபட்ட பயன்பாட்டையும் அதனால் காலந்தோறும் புதிய உருபுகள் தோன்றுவதையும் உணர்ந்துள்ளதைப் புலப்படுத்துகிறது. வேறு எந்த இலக்கணக் கூறும் இவ்வளவு எண்ணிக்கையில் சொல்லுருபுகளைப் பெற்றிருக்கவில்லை. இது மொழி பேசுவோரின் படைப்பாற்றலைக் காட்டுவதாக இன்று கருதப்படுகிறது.

எனவே, உவமைத் தொகையை வரையறுக்கும் முயற்சியில் இறங்காமல் தொல்காப்பியம் கூறிய உவமக் கிளவிகளின் 1. இலக்கண வடிவம் (செய், செய செய்யும், போன்றவை), 2. இலக்கண வகை (இடைச்சொல், வினைச் சொல் போன்றவை), 3. இலக்கணப் பொருள் (ஒப்பு, உறழ்வு போன்றவை) ஆகியவைகளை முதலில் விளக்கி, அடுத்து தொல்காப்பியம் மேற்கொண்ட தோற்றம் அடிப்படையில் வகைகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு அதை ஒட்டித் தொல்காப்பியம் கூறிய மாற்றுப் பாகுபாடும் உரையாசிரியர்கள் கருத்து அடிப்படையில் விளக்கப்படும்.

## 3. சொல் இலக்கணம் :

### 3.1.வழவ வாய்பாடு :

தொல்காப்பியம் 'செய்த' என்ற பெயரெச்ச வாய்பாட்டில் காய்த்த (16) என்ற சொல்லை மட்டும் கூறி ஏனையவைகளைச் 'செய' வினையெச்ச வாய்பாட்டில் (போல, மறுப்ப, விழைய முதலியன) கூறியுள்ளது ஆனால் இலக்கியத்தில் கூடுதலாகச் செய், செய்து, செய்யும், வினைமுற்று ஆகிய வாய்பாடுகள் அமைந்துள்ளதாகச் சீனிவாசன்(1^73· 68 தொடர்ச்சி) எடுத்துக்காட்டியுள்ளார்

சில உதாரணங்கள் :

*1. அடிச்சொல்=செய் என்னும் வாய்பாடு*

இயல்=புள் இயற் கலிமா(அகம் 64.2) பறவை போன்ற குதிரை (புள்ளின் இயல்புடைய கலிமா, புள்ளின் இயல்பான வேகமாகப் போகும் கலிமா), முழவு உறழ் திணி தோள் (அகம்.61.15) 'முழவு போன்ற திண்ணிய தோள்' வேல் ஒன்று கண்ணார்' என்பதில ஒன்று வினையடி நேர் (களை கட்டதனொடு நேர் (குறள் 550)

*2. பெயரெச்சம் : செய்த/செய்யும் என்னும் வாய்பாடுகள் .*

என்ற, ('கயல் என்ற கண்') நாடிய ('வேயொடு நாடிய தோள்') நடுங்கும் (நாகம் நடுங்கும் அல்குல்), அன்ன என்பது இடைச்சொல்லாக இருந்தாலும் பெயர் கொண்டு முடிவதால் குறிப்புப் பெயரெச்சமாகக் கொள்ளலாம்

'கட்டளை அன்ன இட்டு அரங்கு,' (நற்றி.3.3, உரைகல் போல் அரங்கம்)

*3. வினையெச்சம் : செய்து என் வாய்பாடு·*

'கண் பொருது இமைக்கும் திண்மணி' (அகம்.282.5 கண்போன்று இமைக்கும் மணி)

ஆங்கு என்பது இடைச்சொல்லாக இருந்தாலும் வினைகொண்டு முடிவதால் வினையெச்சமாகக் கொள்ளலாம். 'வழிபடுதெய்வம் கண்கண்டாங்கு அலமரல் வருத்தம் தீர' (நற்றி 9,2,3 வணங்குகிற தெய்வத்தை நேரில்பார்த்தது போல மனம் வருத்தம்தீர)

*4. வினையெச்சம் செய வென் வாய்பாடு.*

(போல, ஏய்ப்ப, கடுப்ப, நிகர்ப்ப) சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப புரைய மன்ற புரையோர் கேண்மை (நற்றி 1,4,5, (சந்தன மரத்தின் அமைந்த இனிய தேன் போலச் சிறந்தவருடைய நட்பு உயர்ந்தது)

'வேழத்தின் தலைமருப்பு ஏய்ப்ப கடைமணி சிவந்த நின் கண்' (நற்றி. 39.6.7 யானையின் கொம்பு போல் உன் கண்ணில் உள்ள மணி சிவந்தது)

*5. வினைமுற்று : (புலி போலும், புலி போன்றனன்) ·*

இங்குப் பெரும்பாலும் இடைச்சொற்களே எல்லாப் பால் விகுதிகளும் (அன்னான், அன்னாள், அனனது, அன்னவை) ஏற்று வினையாலணையும் பெயராக உவமப் பொருளில் வரும். அழுத கண்ணே... நீலம் போன்றன (நற்றி.379, 6,9– அழுத கண்கள் நீல நிறம் போன்றன).

'குன்றின் அனையாரும் குன்றுவ' (குறள்.965) (மலைபோல உயர்ந்தவர்களும் தாழ்வர்) என்பதில் 'அனையார்' என்பது வினையாலணையும் பெயர் ஆகும் '(மலை) போல உயர்ந்தாரும்' பரிமேலழகர் பதவுரையில் இன் உவம உருபாகவும் (போல), அனையார் என்பது ஒப்பு உண்மையாகவும் (உயர்ந்தார்) கொண்டுள்ளார். ஆனால் 'அனையார் என்பதை உவம உருபாகவும் (அதாவது வினையாலணையும் பெயர் உவம உருபு) இன் என்பதைச் சாரியையாகவும் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

சேனாவரையர் (எச்சவியல் 16) உவமைத் தொகையை விளக்கும்போது 'நும்மன்னோ ருமற்(று) இனையராயின்/எம்ம னோர் இவட் பிறவலர் மாதோ' (புறநானூறு 210. 3-4 நும் அன்னோர்= நும்மை ஒத்தவர்கள், எம்மனோர்=எம் ஒத்தவர்கள்) என்புழி அன்னோர் என்பது இடைச்சொல் முதனிலையாகப் பிறந்த குறிபபுப் பெயர் ஆகலானும், என்னைப் போல, நும்மையன்னோர், எம்மையன்னோர் என இரண்டாவது விரித்தற்கு ஏற்புடை அறிக' என்று விளக்கியுளளதால் வினையாலணையும் பெயர்களும் உவம உருபாக அமைவது உறுதி ஆகிறது. நச்சினார்க்கினியர் அதே உதாரணத்தை எடுத்துக்காட்டி அன்னோர் என்பது உவம உருபாகிய இடைச்சொல் முதல் நிலையாகப் பிறநத பெயர் என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

வடிவ நிலையில் வினையெச்சம் செயல் நிலையில் பெயரெச்சமாக அமைவது குறிப்பிடத்தகுந்தது.

## 3.2. சொல் இலக்கண வகைகள் :

வினை,இடைச்சொற்கள் உவம உருபாக வருவது வெளிப்படை

'அவை இடைச்சொல்லாகித் தொக்கு வருவனவும், தொகாதே நிற்பனவும், வினைச் சொல்லாகி வேறுபட நிற்பனவும் எனப் பலவாம்' என்று பேராசிரியர் (உவமம் 11) கூறி 'நாலிரண் டாகும் பாலுமாருண்டே' என்ற சூத்திர உரையில்(18), 'இடைச்சொல்லும், உரிச்சொல்லும் வினைச்சொற் போல நிற்கும் எனவும், அதனானே பெயரெச்சமும், வினையெச்சமும் முற்றாகி நிற்கும் எனவும், தெரிநிலைவினை உவமையாய் வரும் எனவும் அறிவித்தற்கு என்க' என்றும் குறிப்பிட்டுள்ளதால், உரிச்சொல்லும் உவம உருபாகப் பயன்படுகிறது என்று ஆகும்.

அதை ஒட்டிச் சீனிவாசன் (மேலது ப.69) 'சால என்பது வினை அடையாக வந்த உரிச்சொல் ஆகும். இச் சால ஒரு இடத்தில் உவம உருபாக வந்துள்ளது' என்று கூறி அதற்கான உதாரணம் கொடுக்கவில்லை.

'துளிபடு மொக்குள் துள்ளுவன சால/தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன' என்ற அகநானூற்று அடிகளில் (324, 7-8, 'மழைத் துளிகள் விழுந்து உண்டாகிய குமிழிகள் குதிப்பது போன்று சேற்றில் விழுந்த நீர்த்துளிகள் தோன்றின') இங்குச் சால என்பதைப் போல என்று பொருள் எழுதி, வினையெச்சம் என்று சுப்பிரமணியன் (அகநானூற்று அகராதி. ப.151) கொடுத்துள்ளார்

அகநானூற்றில் (188 20) சாலும் என்ற வடிவமும் 'கொழுநனும் சாலும் தன் உடன்உறை பகையே' (=கணவனே தன்னோடு இருக்கிற பகைவன் ஆவான்(பகைவனாகப் பொருந்துவான்), சால் என்ற வடிவமும் (தகைசால் நன்மொழி'=தகைமை பொருந்திய நல்ல சொற்கள். 29,11), சான்ற என்ற வடிவமும் ('முல்லை சான்ற கற்பின் ...குறுமகள்' 274.13 கற்பு பொருந்திய பெண்) எனவே, சால், சால, சான்ற என்ற வடிவங்கள் வருவதால் உரிச்சொல் என்று கொள்ள முடியாது. அது செய வாய்பாட்டு வினை வடிவமாகக் கொள்வதே பொருந்தும்.

சீனிவாசன் (1973:63) 'மலர் ஏர் கண் (நற் 120.7) மலர் போன்ற கண் என்பது 'ஏர் என்பதற்கு அழகு என்னும் பொருள் உள்ளது.. எனவே ஈண்டு பெயர் வடிவில் விளங்கும் முழுச்சொல் உவம உருபாக வந்துள்ளது' என்று கூறுவதால் பெயர்ச்சொல்லும் உவம உருபாக அமையும் ஆகிறது மேலும் 'மழையேர் ஐம்பால்' (மேகம் போன்ற (கருத்த) கூந்தல் என்று பேராசிரியரும் எடுத்துக்காட்டுவார் (291) என்று தன் கருத்தை வலியுறுத்தியுள்ளார் (ப.70).

'மலர் ஏர் உண்கண்' (=மலர் போன்ற கண்) நற்றிணை. 120.7) என்பது இன்னொரு உதாரணம். இளம்பூரணர் (11) 'முத்தேர் முறுவலாய்' (கலித்தொகை 93.11) என்று எடுத்துக்காட்டினாலும் பெயர் என்று பொதுமைப்படுத்தவில்லை.

அகநானூற்றில் ஏர என்ற வடிவம் 'இரும்பு செய் நொடியின் ஏரவாகி' (26.6) என்று வந்துள்ளதற்கு 'இரும்பாற் செய்யப்பட்ட பூணின் அழகினை உடையவாகி' என்று பொருள் கொள்ளப்படுவதால் குறிப்பு வினையெச்சமாகக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

தமிழ்ப் பேரகராதி ஏர்(தல்) வினை என்று கொண்டு இரண்டு பொருள் கொடுத்துள்ளது.1. எழுதல் என்ற பொருள் எழுதி 'பனிக்கடல் பருகி வலன் ஏர்பு' (குளிர்ந்த கடலைப் பருகி வலது பக்கம் எழுந்து) என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளது. 'ஏர்பு' என்பது செய்பு என்ற வினையெச்ச வடிவமாகும். (தொல் வினை. 21) அதனால் ஏர் என்பது வினையடியாகச் செயல்படுகிறது என்பது தெளிவு. 2. ஒத்தல் என்ற பொருள் எழுதி 'முத்தேர் முறுவலார்' (இனியவை நாற்பது, 2=முத்தை ஒத்த பல்லை உடையவர்) என்ற உதாரணத்தைக் கொடுத்துள்ளது. அதன்படி ஏர் என்ற குறிப்பு வினையடி உவம உருபாகப் பயின்றுள்ளது என்று பொருள் எனவே 'மலர் ஏர்உண்கண்' என்பதிலும் குறிப்பு வினையடி உவம உருபாக வந்துளளது என்றே கொள்ளவேண்டும் மாற்றாக ஏர் அழகு என்று பொருள் கொண்டால் மலர் ஏர் கண் என்பதை மலர்+அழகு கண் என்று பிரித்துப் பொருள் கொண்டால் ஏர் என்பது கண்ணுக்கு அடையாக வந்துள்ளதாக விளக்க வேண்டும். அப்படியானால் அது உவமைத் தொகை ஆகும்

மேலும் 'ஒப்பின், உருவின், புரையுநள் முதலியவைகளும் பெயர் வடிவங்கள் ஆகும்' என்றும் சீனிவாசன் (ப.71) குறிப்பிட்டுள்ளார். 'ஆலி ஒப்பின் தூம்புடைத்திரள் வீ' (அகம்.95.7, பனிக்கட்டி போலும் உள்ளே உட்துளையினை உடைய பூக்கள்), அங்கும் இன் என்ற உவமை உருபும் உள்ளதால் ஒப்பு என்ற பெயர் மட்டும் உவமை உருபு என்று கொள்ள முடியாது.

'நெய்தல் உருவின் ஐது இலங்கு அகல் இலை' (அகம்.119.11, நெய்தல் பூப்போலும் உருவினை உடைய அழகாக விளங்கும் அகன்ற இலை). உண்மையில் இதை 'நெய்தல் உருவம் போன்ற... இலை' என்றும் கொள்ளலாம். எனவே இன் தான் உவம உருபு. இன்னொரு நிலையில் பன்மையில் இரட்டை உருபு (அவர்கள், வந்தார்கள், அவைகள்) அமைந்துள்ளதைப்போல உவமையிலும் இரட்டை உவம உருபுகள் அமைந்துள்ளதாகக் கொள்ளலாம்.

'அட்டரக்கு உருவின் வட்டு' (நற்றி. 193.1) என்பது உருக்கிய அரக்குப் போன்ற வட்டு என்று பொருள் கொண்டுள்ளதால் சீனிவாசன் உருவின் பெயர் வடிவம் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது வடிவ நிலையில் உரு (பெயர்)+இன் (உருபு) என்று ஆகும். ஆனால் அரக்கு வடிவத்தை உடைய வட்டு என்று கொண்டால் 'வட்டரக்கு உரு' என்பது உவமைத் தொகையாக அமையும்.

'கோட்டுவட்டு உருவின் புலவு நாறு முட்டை' (அகம்.160.6) என்பது 'கொம்பினாற் செய்த வட்டு வடிவம் போன்ற புலால் மணக்கும் முட்டை' என்று பொருள் உடையது. இங்கு உருவு என்ற பெயர்ச்சொல் இன் விகுதி பெற்றுள்ளதாகக் கொள்ளலாம். அல்லது 'கோட்டுவட்டு உரு' என்பது உவமைத் தொகையாய் அமைந்து அது இன் உருபு ஏற்று வந்தது என்று கொள்ளலாம்.

'நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய்' (திருமுருகு 279, 80) 'நின்னோடு ஒப்பார் இல்லாத புலமை உடையோனே'. இங்கு புரையுநர் வினையாலணையும் பெயராக நேர்ப்பொருளில் வந்துள்ளது. அது 'ஒப்பல் ஒப்புரை' என்ற (வேற்றுமையியல், 13.6) முறையில் மூன்றாம் வேற்றுமை ஒடு உருபு வந்துள்ளதாகக் கொள்ளலாம். 'என்னொடு புரையுநள் அல்லள்' (பதிற்றுப்பத்துதிரட்டு 4.2) என்பதும் அதே முறையில் அமைந்துள்ளது. அதாவது புரையுநர்/புரையுநள் ஆகியவைகளை உவம உருபாகக் கொள்ளமுடியாது.

'(துரப்பு அமை) ஆணி எண்ணாள் திங்கள் வடிவிற்றாகி' (பொருநராற்றுப்படை 11=ஆணி அரை வெண்ணிலாவின் வடிவம் உடையதாக உள்ளது) என்பது ஆணி, திங்கள் வடிவு என்று அமைந்து உவமைத் தொகையாகவே அமைந்துள்ளது.

"நெய்த்தோர் நிற அரக்கின் நீர்' (பரிபாடல், 10.12) என்பதில் நிறம் என்ற விளக்கச்சொல் உவமை விளக்கமாக வந்துள்ளது என்பது சீனிவாசன் காட்டும் இன்னொரு உதாரணம். அதற்குச் சாரங்கபாணி (2003:162) (இரத்தம் போன்ற தூய நீர் என்றும், சுப்பிரமணியனும் பிறரும் (2004: 272) குருதியைப் போன்ற சிவந்த நிறமுடைய அரக்கு நீர் என்றும் உரை எழுதியுள்ளார்கள். "நெய்த்தோர் நிற+அரக்கின் நீர் என்று உவமைத் தொகையாகக் கொள்ள வேண்டும். அரக்கு என்பது செந்நிறம் என்று தமிழ்ப் பேரகராதி பொருள் கொடுத்துள்ளது. நெய்த்தோர் அரக்கு மீமிசைச் சொல்லாகக் கொள்ளலாம். அப்போது நெய்த்தோர் நிற அரக்கின் + நீர் என்று பிரித்து அரக்கு என்ற பெயர்ச்சொல் இன் உருபு ஏற்று உவமைப் பொருளில் வந்துள்ளதாகக் கொள்ளலாம்.

*தொடர்ச்சி அடுத்த இதழில்*

# காலம் தவறாமை

பேராசிரியர் **மு.மணிவேல்,**
தமிழியற் புலத்தலைவர்,(ப.நி),
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 020
கைபேசி . 98655 34622

உலக மாந்தரின் இயக்கம் காலத்தோடு கலந்தது; காலத்தோடு தொடர்வது. காலம் வெறுமனே விட்டுவிடுவதற்கன்று, செயல் செய்வதற்குரியது காலம் கடந்து செல்கிறது; அதனோடு மனிதனும் வாழ்ந்து செல்கிறான் காலத்தைத் தக்கவாறு பயன்கொண்டு செயல் செய்து வாழக்கற்றவர்கள் மேன்மை அடைகின்றனர் செயல் செய்யாதவரிடத்தில் காலம் காத்து நிற்பதுமில்லை; தாழ்ந்து போவதுமில்லை. காலத்தைத் தவறவிட்டவர் வாழ்க்கையைத் தவறவிட்டவரும் வாழ்க்கையில் தாழ்வுற்றவரும் ஆவர்

'காலம் பொன் போன்றது'; காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பனவான பழமொழிகள் காலத்தின் அருமையையும் காலத்தைப் பயன்கொள்ள வேண்டும் என்பதையும், காலத்தில் செயல் செய்ய வேண்டும் என்பதையும் கூறுவன.

எந்தப் பருவத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அந்தப் பருவத்தில் அதைச் செய்ய வேண்டும். 'பருவத்தே பயிர் செய்', 'ஆடிப்பட்டம் தேடி விதை', 'இளமையில் கல்' இது குறித்துக் கூறப்பட்டவை. ஆகவே காலம் பார்த்துக் காலம் போற்றிச் செய்வது தான் சிறப்புச் சேர்க்கும்.

காலம் தவறாமல் காலங்கள் வருகின்றன. மழைக்காலமும், வாடைக்காலமும், பனிக்காலமும், வெயில் காலமும், பனிக்காலமும் அவை வரவேண்டிய காலத்தில் வந்து செல்கின்றன. அவ்வாறே விடியலும், காலையும் பகலும், மாலையும் இரவும் தவறாது வந்து போகின்றன.

காலத்தை நாம் பற்றிச் செல்ல வேண்டுமே தவிரக் காலம் நம்மைப் பின்பற்றிச் செல்வதில்லை. பயணம் மேற்கொள்ள விரும்புகிற ஒருவர் அதற்கான பேருந்தோ, இரயிலோ, விமானமோ காலம் தாழ்த்தாது வரவேண்டும் என்று எண்ணுவதும், அவை வரும் காலத்திற்கு முன் உரிய இடத்திற்குச் சென்று சேர்வதும் செய்கின்றபோது பொதுவாழ்வில் பிறருக்கான பணிசெய்யும் பொறுப்புள்ளவர்கள் காலத்தில் தவறாது பணி செய்ய வேண்டும் என்று பிறர் எதிர்பார்ப்பதும் நியாயமானது தானே!

காலத்தில் படிக்காதவன் தேர்ச்சியை இழக்கிறான் காலத்தைப் பின்வாங்கச் செய்ய வேண்டுமேயல்லாமல், காலத்தின் பின் தங்குதல்

கூடாது. காலம் வழிபட்டு விட்டு விடுவதற்கன்று காலத்தில் தவறாமல் பணி செய்கிறவர் காலமாவதில்லை காலங்காலமாகப் பேசப்படுகிறவர் ஆகிறார்; காலத்தை வென்றவர் ஆகிறார். காவியமும் ஆகிறார்.

காலத்தோடு ஒட்டி நடந்தால் நிலையில்லாத செல்வம் நிலைபெறும் என்கிறார் வள்ளுவர்.

*"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்*
*தீராமை ஆர்க்கும் கயிறு"* (குறள 482)

காலம் கருதி இடத்தாற் செய்யும் செயலால் உலகத்தைப் பெற வேண்டினாலும் பெறமுடியும் என்கிறார் அவர் (குறள் 484); காலம் அறிந்து காலத்தில் செய்தால் செய்ய முடியா செயல் இல்லை என்பதும் வள்ளுவரின் கருத்து

உலகத்தைப் பெறக் கருதுகின்றவர் ஏற்ற காலம் வரக் காத்திருக்க வேண்டியதில்லை; கருதிய மீன் வரும் வரைக் காத்திருக்கும் கொக்கினைப் போலக் கருதியிருக்க வேண்டியதில்லை. காலம் முழுவதும் இயங்க வேண்டும்.

இழந்த காலத்தைத் திரும்பப் பெற முடியாது. காலத்தின் பெருமையை உணர்ந்தவரால்தான் காரியத்திலும் பெருமை கொள்ள முடியும்.

'காலம் ஒரு இரக்கமற்ற எதிரியும் இரக்கமற்ற நண்பனும் ஆகும்' என்கிறார் காந்தியடிகள். செயல்வீரர்க்கு எல்லாக்காலமும் நல்ல காலம்தான். இராகு காலம், எமகண்டம் பார்த்தால் அதுபோதாக் காலமாகிப் போகும்.

காலத்தைத் தவறவிடும் இளைஞன் ஒருவன் ஒருமணிப் பொழுதில் வயோதிகனாகிப் போகிறான் என்கிறார் பேகன்

காலத்தை விட்டு விட்டு ஒடுவதில் பயனில்லை; காலத்தில் புறப்படுவதுதானே சிறப்பும் தேவையும் ஆகும்.

'காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியுமானால் உனக்கு வாழ்வின் *மதிப்பும் தெரியும்' என்கிறார் நெல்சன்.*

'காலமும் நானும் சேர்ந்து நிற்பதால் எதையும் என்னால் நிறைவேற்ற முடிகிறது' என்கிறார் பிலிப். இவ்வறிஞர்களின் கருத்துக்களைக் காதில் போட்டு, காலம் தவறாமல் செயல் செய்து, காலத்தைக் கடந்தும் எதிர் காலத்தில் நிலை பெறுவோம்; புகழ் பெறுவோம்.

# ஒப்பிலக்கியமும் மொழி பெயர்ப்பும்

முனைவர் **உ. கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021
கைபேசி 94435 71776.

## முன்னுரை :

மொழி மற்றும் இலக்கிய ஆய்வுத்துறைகள் மொழிபெயர்ப்புத் துறையையே சார்ந்துள்ளன மொழிபெயர்ப்பு இல்லையாயின் உலக மொழிகளில் இலக்கியத் திறனாய்வும் ஒப்பிலக்கியத்துறைகளும் வளர்வதற்கு வாய்ப்பே இல்லை எனலாம்.

## மனிதனின் பன்முகத் தேவைகள்

*'மனிதன்'* பன்முகத் தேடல்களையும் தேவைகளையும் கொண்டவன் மனிதனுக்கு மட்டுமே பன்முக ஆர்வங்களும் ஈர்ப்புகளும் உள்ளன. இலக்கியம், வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், இசை, ஓவியம், சிற்பம், பொருளியல், சமயம், தத்துவம், மொழி, நடைமுறைத் தேவைகள், பயணம், உலகத்தொடர்பு, கருத்துப்பரிமாற்றம் என்று பல துறைகளில் மனிதனின் நாட்டம் விரிவடைகின்றது. ஒன்றில் ஆழ்ந்த புலமையும் பயிற்சியும் கொண்ட மனிதன், மற்றொருவன் கண்ட கருத்தியல் புதுமைகளை முடிந்தவரையில் அறிந்து கொள்ள விழைகின்றான். இது மனித சமுதாய வாழ்வின் இயல்பான கூட்டுத்தன்மையாகும். மனிதன், தன் தனி முயற்சியால் மட்டும் மனநிறைவு கொள்வதில்லை. மனிதனின் இருப்பு கூட்டுவாழ்க்கைத் தளத்தில் இயங்குகின்றது

காலங்காலமாக நிறம், இனம், மொழி, நாடு, மதம் என்ற பிரிவினைகளைக் கடந்து மனிதகுல முன்னேற்றத்திற்காக யார் யாரோ அரிதின் முயன்று தேடித்தந்த பல்வேறு அறிவுத் துறைகளின் அடிப்படைகளில் தான் இன்றைய சமுதாய வாழ்வின் அடிப்படைகள் அமைந்திருக்கின்றன நாளைய உலக வாழ்க்கைக்கும் இது அடிப்படையாகும்.

“அழகானது, சத்தானது, பயனுள்ளது, தேவையானது என்பதை எங்கு கண்டாலும் அதைத் தனதாக்கி மகிழும் பேறு மனிதனுக்கு உண்டு. இதை மொழியாக்கப் பணிகள் நடைமுறைச் சாத்தியமாக்கியுள்ளன மனித இனம் முழுவதின் சாதனைகளையும் மனிதன் மிக இயல்பாகத் தனதாக்கிக் கொள்ளும் முயற்சியில் அரும்பெருங்கருவியாக அமைவது மொழிபெயர்ப்பு அதனால் தான் ஒட்டு மொத்தமான மனிதஇன வளர்ச்சி வரலாற்றில் மொழிபெயர்ப்பியல் பேரிடம் பெறுகிறது. (சேதுமணியன், மொழி பெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும் ப 5) என மொழி பெயர்ப்பின் முதன்மையையும் தேவையையும் வலியுறுத்துவார்.

## மொழிபெயர்ப்பு-இன்றியமையாமை, நோக்கம், பணிகள், பயன்கள்:

ஒரு மொழியின் கருத்துகளையும், சிந்தனைகளையும் மற்றொரு மொழிக்கு மாற்றம் செய்வதே மொழிபெயர்ப்பாகும். மொழியானது அம்மொழியைப் பேசும் மக்கள் வாழும் இடத்தையும் இயற்கைச் சூழலையும் சார்ந்தது. ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களுக்கு அம்மொழிக் கேற்றவாறு பழக்கவழக்கங்களும் பண்பாட்டுக்கூறுகளும் உள்ளன. ஒவ்வொரு மொழியின் சொற்களும் சூழலும் பண்பாடும் உட்பொதிந் திருக்கும். மூலமொழியும் பெறும்மொழியும் குறிக்கோள் மற்றும் பண்பாட்டுக் கூறுகளில் வேறுபட்டவை. இவ்வேறுபாடுகள் பெறும் மொழியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மொழிபெயர்ப்பை ஒரு கலையாகக் கொள்ளாமல் அறிவியலாகக் கொண்டு மூலநூலின் கருத்துக்களைச் சிதையாமல் படிப்போர் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் பெறுமொழியில் எவ்வாறு கூறுவது என்பது பற்றிய சிந்தனைகள் உலகின் பலபகுதிகளிலும் சிந்திக்கப்படுகின்றது. (ஞானம், மொழிபெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும். ப.1)

உலகத்தொடர்புக்கு மொழிபெயர்ப்பு மிகவும் இன்றியமையாதது. வளரும் நாடுகளில் அதன் பன்முக வளர்ச்சிக்கும் தேவைக்கும் மொழிபெயர்ப்பு உதவுகின்றது. நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல் கண்டுபிடிப்புக்களும் அறிவியல் தொழில்நுட்ப அறிவும் மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். வளமான தொழில் நுட்ப அறிவுகள் மக்கள் மொழியில் அதாவது அவரவர் தாய்மொழியில் சென்றடைந்தால் தான் வளமான நலமான சமூகத்தைக் கட்டமைக்க இயலும். இதற்கு மொழிபெயர்ப்பே முக்கிய ஊடகமாகும். தொல்காப்பியர் வழிநூலின் வகைகளைக் குறிப்பிடும்போது,

*"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து*
*அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே''*

(தொல். பொருள்.நூற்பா. 1597)

எனக் குறிப்பிட்டுள்ளார். முதல் நூலாசிரியன் விரித்துச் சொன்னதைத் தொகுத்துச் சொல்வதும், அவன் தொகுத்துச் சொன்னதை விரித்துச் சொல்லுவதும், அவ்விரண்டையும் தொகை விரியாகச் சொல்லுதலும், பிறமொழி நூலை மொழிபெயர்த்துத் தமிழில் கூறலும் என வழி நூல் நான்கு வகைப்படும் என்கின்றார் தொல்காப்பியர். 'மொழி பெயர்த்து அதர்ப்படயாத்தல்' என்பது பொதுவகையால் மொழிபெயர்ப்பினையே குறிக்கின்றது.

கருத்துவளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளுதலும் சிந்தனைப் பகிர்தலுமே மொழிபெயர்ப்பின் பொது நோக்கங்களாகும். அறிவியல், பொருளாதாரம், புவியியல், வரலாறு, அரசியல், சித்தாந்தம் ஆகியனவற்றில் கருத்து வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் அடிப்படைகளாகவும் முதன்மைப் பொருள்களாகவும் அமைகின்றன.

ஒரு நாட்டின் பண்பாடு, வாழ்வியல், வழிபாடு, கலாசாரம், பழக்கவழக்கங்கள், மனப்போக்கு ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கும்

புரிந்து கொள்வதற்கும் இலக்கியம் மற்றும் அந்நாட்டின் கலைகள், அரசியல் தொடர்பான கூறுகள் மற்றும்–அது சார்ந்த மொழி பெயர்ப்புக்களே துணையாகின்றன. இவற்றை மொழிபெயர்ப்பின் *'பொதுநோக்கங்கள்'* எனக் கொள்ளலாம்.

*மொழிபெயர்ப்புப் பணியைப் பயன்பாட்டு நோக்குடையதாகவே* கருதலாம். மொழிபெயர்ப்பின் முக்கியப் பணிகள் வருமாறு:

- உலகநாடுகளுக்கிடையே நல்லெண்ணம், நட்புறவு, கூட்டுறவு, கொடுக்கல் வாங்கல் ஆகியனவற்றை வளர்த்தல்.
- சிறந்த உலக இலக்கியப் படைப்புக்களை மொழிபெயர்த்து மக்களுக்கு அறிமுகம் செய்தல்.
- உலகின் ஒவ்வொரு மொழி இலக்கியத்தையும், பிற நாட்டின் பிறமொழியின், பிற பண்பாட்டின் மக்களினத்திற்கு அறிமுகம் செய்து வைத்தல்.
- மூலமொழி இலக்கியத்தின் பண்பாட்டினை, பெறுமொழியில் இனங்காட்டி உலகப் பண்பாட்டின் ஒருமையினைக் காணுதல்.
- அறிவியல் சிந்தனைகளை உலகப் பொதுமையாக்குதல்.

(சு சண்முகவேலாயுதம், மொழிபெயர்ப்பியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985, பக்.28–36) மொழிபெயர்ப்பினால் விளைகின்ற பயன்கள் பற்பல. மொழிபெயர்ப்பு ஒருலகச் சிந்தனைக்கு உலக மக்களை அழைத்துச் செல்கின்றது.

- மொழிபெயர்ப்பினால் பிறமொழி இலக்கிய அறிவைப் பெற முடிகின்றது.
- அறிவியல் புதுமைகளையும் ஆராய்ச்சிகளையும் கண்டு பிடிப்புக்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது
- கல்வி வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாக மொழிபெயர்ப்பு விளங்குகின்றது
- பல்வேறு மொழிகளின் தனித்தன்மைகள், சிறப்புக்கள், இலக்கியப் படைப்புக்கள், படைப்பாளிகள், படைப்புத்திறன் ஆகியனவற்றை அறிய உதவும் மொழிபெயர்ப்புக்கள் ஒப்பிலக்கிய ஆய்வுக்கும் ஆதாரங்களைக் கொடுத்து, ஒப்பிலக்கியச் சிந்தனையை வளர்க்கின்றன.

முக்கியமாக மொழிபெயர்ப்பு மொழித்தடைகளை உடைக்கின்றது; கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுகின்றது ஆயினும் மூலமொழியின் உணர்வினை, அப்படியே பெறும் மொழியில் தந்துவிட முடியாது.

*'சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல்'* பல நேரங்களில் ஏற்கத்தக்க மொழிபெயர்ப்பாக அமையாது மொழிபெயர்ப்பின் முக்கியப்பண்பு மூலமொழிக் கருத்துக்களை, அப்படியே பெறும்மொழியில் பெயர்த்துத் தருவதே. 'மொழிபெயர்ப்பு' என்பது ஒரு மொழியின் கருத்துக்களை மற்றொரு மொழியில் மொழிமாற்றம் செய்து தருவதே.

இதில் பெறும் மொழியின் மரபும், மூலமொழியின் கருத்துக்களும் மாறாமல் இருத்தல் வேண்டும். நூலினைப் படிப்பவர்கள் அது மொழிபெயர்ப்பு என்பதை உணராமல், அம்மொழியைச் சேர்ந்த இலக்கியமே இது என நினைக்கத்தக்க வகையில் அமையும் மொழியாக்க மொழிபெயர்ப்பே (Transcreation) சிறப்புடையதாகும்.

## மொழி பெயர்ப்பு ஏன் தேவை?

மனிதனின் அறிவு வளரவளரத்தான் அவனது மொழியும் கலையும் இலக்கியமும் பண்பாடும் வளரும்; பண்பாடும் பிறமொழியைக் கற்றறியும் ஆற்றலால், அதன் தூண்டுதலால் மனிதன் தன் அறிவை மென்மேலும் அதிகரித்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைக்கும். பிறமொழி நூல்கள் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அந்நூல்களின் கருத்துக்களை அறியும்போது மனிதனின் சிந்தனையாற்றல் அதிகரிக்கும் மனிதனின் அறிவைப் பெருக்குவதிலும் அறிதிறனை வளர்ப்பதிலும் மொழிக்கு முக்கியப்பங்குண்டு, மனிதன் பிறமொழி, பிறநாட்டு, பிற பண்பாட்டுச் சிந்தனைகளை அறிய வேண்டும் என்ற நோக்கத்தினாலும், விருப்பத்தினாலும் உலகெங்கும் மொழிபெயர்ப்புக்கள் போற்றப்பட்டு வருகின்றன மேலைநாட்டுக் கலைகளும் அறிவியல் சிந்தனைகளும் தமிழில், தமிழ்மொழியில் மொழியாக்கம் செய்யப்படவேண்டும் என்பதே பாரதியார் விருப்பமாகவும் வேண்டுகோளாகவும் இருப்பதை அறிய முடிகின்றது இதனை,

*"புத்தம் புதிய கலைகள்-பஞ்ச*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;*
*மெத்த வளருது மேற்கே-அந்த*
*மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"*

*சொல்லவுங் கூடுவதில்லை-அவை*
*சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கு இல்லை!*
*மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த*
*மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்*

*என்றந்தப் பேதை உரைத்தான்-ஆ!*
*இந்த வசையெனக்கு எய்திட லாமோ!*
*சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!*

*தந்தை யருள்வலி யாலும்-இன்று*
*சார்ந்த புலவர் தவவலி யாலும்*
*இந்தப் பெரும்பழி தீரும்-புகழ்*
*ஏறிப் புவிமிசை யென்றும் இருப்பேன்"*

(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், தமிழ்த்தாய், 9–12)

எனத் தமிழ் மக்களிடம் தமிழ்த்தாய் பேசுவதாகப் பாரதியார் பாடியுள்ளார் தமிழ்மொழிப் பற்றையும் தமிழுணர்வையும் தன் இருவிழிகளாகக் கொண்ட பாரதியாரே, மேலைநாடுகளில் வளரும் மேன்மைக்கலைகளைத்

தமிழாக்கம் செய்ய வேண்டுமென அன்றே வலியுறுத்தியுள்ளார். பாரதியார் தமிழைத் தவிர ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலும் தேர்ந்த புலமை உடையவர் என்பது நோக்கத்தக்கது. அறிவியல், அறிவியல் கண்டுபிடிப்புக்கள், அது சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சியினால் தான் தமிழ்நாடும் மக்களும் இலக்கியமும் பண்பாடும் வளர்ச்சிப் பாதையில் செல்ல முடியும் என்பதை நன்குணர்ந்த பாரதியார், அத்தகைய செயற்பாடுகளில் தமிழர்கள் ஈடுபட வேண்டும் எனத் தமிழ்த்தாயின் வாய்மொழியாக அன்றே வலியுறுத்தியுள்ளார். பாரதியாரின் தொலை நோக்கான பார்வைக்கும் அறிவியல் சிந்தனைக்கும் சான்றளிக்கும் வகையில்,

*"மந்திரங் கற்போம் வினைத் தந்திரங்கற்போம்*
*வானை யளப்போம்கடல் மீனையளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்*
*சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்"*

(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், பாரததேசம்,1.7.11) என்ற கவிதையும் அமைகின்றது.

## மானிட ஒருமைப்பாடும் மொழியும் :

மனிதகுல ஒருமைப்பாட்டிற்கு மொழியும் சமயமும் பண்பாடும் முக்கியத் தடைகளாக உள்ளன இவற்றுள் மொழித் தடையை, உலகமொழிகளைக் கற்பதன் வாயிலாகவும், உலக மொழிகளின் அரசியல், அறிவியல், இலக்கியங்களை அவரவர் தாய்மொழிகளில் மொழியாக்கம் செய்வதனாலும் ஓரளவு நீக்கிவிடலாம் மொழியே சிந்தனையின் ஊற்று; சிந்தனையே அறிவின் தாய். இம்மொழியைக் கருத்துலகின் வேகத்திற்கு ஏற்புடையதாகத் தகுதிப்படுத்த மொழிபெயர்ப்பு தேவை.

அறிவு வளர்ச்சி, சிந்தனையை வாயிலாகக் கொண்டிருப்பதால் அதற்குத் தாய்மொழி அறிவு வேண்டும் மனிதன் தாய்மொழி அறிவுடன் பிறமொழி அறிவையும் பெற முயற்சிக்க வேண்டும். 'மனிதகுலம் ஒன்றே; மானுடம் ஒன்றே; மானுடம் போற்றப்பட வேண்டும்' என்னும் மனிதகுல ஒருமைப்பாட்டினை அடைய மனிதநேயத்தைப் போற்றி மக்கட் பண்பை வளர்க்க, மனித இனம் பல்வேறு மொழிகளில் தேடிக்கண்ட கருத்துக்களும் சிந்தனைகளும் பொருள்களும் மொழிகளின் எல்லைகளைக் கடந்து பரவ வேண்டி உள்ளது. இதற்கு உதவுவதே மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு மனிதனும் தன்னிடமிருக்கும் அறிவையும் மொழியையும் பயன்படுத்திப் பிற மொழிகளையும் கற்க வேண்டும் அவரவர் தாய்மொழியில் பிறமொழி நூல்களையும் மொழி பெயர்த்துத் தருதல் வேண்டும்.

தமிழ்மொழியை வாழும் மொழியாகவும் வளரும் மொழியாகவும் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் அறிவியல் மொழியாகவும் மாற்ற வேண்டும் என்பதை உணர்ந்தே பாரதியார் இறவாத புகழுடைய புதுநூல்களைத் தமிழ்மொழியில் இயற்றுதல் வேணடும் என்றார். இதனை அவர் 'மொழி பெயர்ப்பு வேணடும்' என்னும் நோக்கத்தில்

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்*

*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை யில்லை*
*திறமான புலமையெனில் வெளிநாட்டார்*
*அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"*

(பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள், தமிழ்நாடு, தமிழ் 2) எனப் பாடியுள்ளார்.

## தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்:

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் துர்விநீதன் என்னும் அரசன் சமஸ்கிருதத்தில் இயற்றிய 'பிருகத்கதா' என்னும் காப்பியத்தைத் தழுவிக் கொங்குவேளிர் 'பெருங்கதை' என்னும் சமணக் காப்பியத்தைத் தமிழில் படைத்துள்ளார் க்ஷத்திரிய சூடாமணி, கந்திய சிந்தாமணி, ஜீவாதாரசம்பு, ஸ்ரீபுராணம் முதலான வடமொழி நூல்களை ஆதாரமாகக் கொண்டு கி.பிஒன்பதாம் நூற்றாண்டில் திருத்தக்கதேவர் 'சீவகசிந்தாமணி' காப்பியத்தைப் படைத்துள்ளார்

வடமொழியில் புஷ்ப தந்தர் எழுதிய 'யசோதர சரிதம்' என்னும் வடமொழி நூலைத் தழுவி வெண்ணாவலூர் உடையார் வேள் 'யசோதர காவியம்' என்னும் நூலைப் படைத்துள்ளார். வடமொழியில் வான்மீகியால் இயற்றப்பட்ட இராமாயணமே கம்பரின் தழுவலில் கி.பி 12ஆம் நூற்றாண்டில் 'கம்பராமாயணம்' என்னும் தமிழ்க் காப்பியமாயிற்று. வியாசர் வடமொழியில் இயற்றிய மகாபாரதத்தைத் தழுவி கி.பி14ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூராழ்வார் தமிழில் 'வில்லிபாரதம்' படைத்துள்ளார்.மேலே குறிப்பிட்ட இக்காப்பியங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஒப்பாய்வு நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. வடமொழி தமிழ் என்ற இருமொழி அடிப்படையில் பரந்து விரிந்த ஒப்பாய்வுக் களன்கள் உள்ளன.

கிரேக்கப் பேரறிஞன் பிளேட்டோவின் 'Pilato Apology' என்னும் மாபெரும் உரையாடல்களின் தொகுதி 'சோக்ரதர்' என்னும் பெயரில் தமிழில் சி.இராசகோபாலாச்சாரியாரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது அவர் உரோமாபுரிப் பேரரசன் மார்க்ஸ் அரேலியனின் நாட்குறிப்பினை 'ஆத்ம சிந்தனை' என்னும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார் எபிரேய மொழியிலுள்ள 'விவிலியம்' 19அம் நூற்றாண்டில் இலங்கைக் கிறித்துவச் சங்கத்தினரால் சிறப்பாகத் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளது பழைய ஏற்பாட்டிலுள்ள 'Psalms' என்னும் துதிப்பாடல்களைத் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் 'தேவ சங்கீதம்' என்னும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார்.

பாரசீகக் கவிஞர் உமர்கயாம் பாடல்களைத் தமிழ் மொழிபெயர்ப்பு எனத் தெரியாத வகையில் தேசிய விநாயகம்பிள்ளை, சாமிசிதம்பரனார், ச.து.சு.யோகி ஆகியோர் மொழிபெயர்த்துத் தந்துள்ளனர். கவிதையை எப்படி மொழிபெயர்க்க வேண்டும் என்பதற்கு இம்மொழி பெயர்ப்புக்கள் சான்றளிக்கின்றன

அரேபிய மொழியிலிருந்து 'திருக்குர்ஆன்' ஏழு இசுலாமிய அறிஞர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அரேபியமொழிப் பாடல்கள் 'அரேபிய ஞானப் புதையல' என்னும் பெயரில் குணங்குடி மஸ்தான் சாகிபுவால் தமிழில் பெயர்க்கப்பட்டுள்ளன. அரேபியக் கவிஞன் இக்பாலின் கவிதைகள் 'இக்பால் கவி அமுதம்' 'இக்பாலின் ஞானோதயம்' என்னும் பெயர்களில் தமிழாக்கம் செய்யப்பெற்றுள்ளன.

ஜான்பன்யன் ஆங்கிலத்தில் எழுதிய The Pilgrim's Progress' என்னும் நூலைத் தழுவி எச் ஏ. கிருஷ்ணப்பிள்ளை, 'இரட்சண்ய யாத்திரிகம்' என்னும் கிறித்துவக் காப்பியத்தைப் படைத்துள்ளார். தமிழில் மாயூரம் வேதநாயம்பிள்ளை இயற்றிய 'பெண்மதிமாலை'யைப் பேகன் (Bacon) என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார் ஜான்மில்டனின் "Paradise Lost" என்ற காப்பியத்தை 'சுவர்க்க நீக்கம்' என்ற பெயரில் வெ.சுப்பிரமணிய முதலியார் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். தாமஸ் கிரேயின் 'The Elegy Written in the Country Churchyard' என்னும் ஆங்கிலக் கவிதையை 'இரங்கற்பா' என்ற தலைப்பில் வி.கந்தசாமிப்பிள்ளை தமிழாக்கம் செய்துள்ளார்.

ஷேக்ஸ்பியரின் 'Hamlet' என்னும் நாடகத்தை 'சிம்மபுரிவீரன்' எனவும், 'As you like it' என்னும் நாடகத்தை 'நீ விரும்பிய விதமே' என்னும் பெயரிலும், 'The Merchant of Venice' நாடகத்தை 'வாணிபுர வணிகன்' என்ற பெயரிலும் பம்பல் சம்பந்த முதலியார் தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார்.

ஷேக்ஸ்பியரின் பல நாடகங்கள் தமிழில் பலரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. லிட்டன் பிரபுவின் 'The Secret way' என்னும் நூலைத் தழுவிப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'மனோன்மணீயம்' என்னும் நாடகக் கவிதைக் காப்பியத்தைத் தமிழில் படைத்துள்ளார்.

நாத்தானியல் ஹாத்தார்னின் சிறுகதைகள் 'அற்புதக்கதைகள்' என்றும், எட்கர் ஆலன்போவின் சிறுகதைகள் 'இதயக்குரல்' என்ற பெயரிலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன கா அப்பாதுரை, சார்லஸ் டிக்கன்னின் 'A Tale of two cities' என்ற நாவலை 'இருநகரக்கதை' என்றும், கே வேலன் 'இருபெரும் நகரங்கள்' என்றும் மொழி பெயர்த்துள்ளார்.

வால்டர் ஸ்காட்டின் 'Ivenho' என்னும் நாவலை 'ஐவன்ஹோ' என்னும் பெயரில் ஆறு தமிழறிஞர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர் ரேனால்ட்ஸின் 'Lyla' என்னும் ஆங்கிலக் கதையினைத் தழுவி மறைமலையடிகள் 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்னும் நாவலைப் படைத்துள்ளார். ஹெம்மிங்வேயின் 'A farewell to Arms' என்னும் நாவலைத் தழுவியே புதுமைப்பித்தன் 'பிரேதமனிதன்' என்ற நாவலைப் படைத்துள்ளார்

ஷெல்லியின் 'A Defense of Poetry' என்னும் திறனாய்வுக் கட்டுரையை வி ஆர்.எம் செட்டியார் *'மின்னல் கீற்று'* எனவும், அரிஸ்டாடிலின் 'Poetics' என்னும் கவிதைத் திறனாய்வுக் கட்டுரை நூலினை அ.அ மணவாளன் 'கவிதையியல்' என்ற தலைப்பிலும் தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். எட்மண்ட் பர்க்கின் பாராளுமன்றப் பேச்சுக்கள்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர், அப்பேச்சுக்கள் சி.என்.அண்ணாதுரையின் மேடைப் பேச்சுக்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன

பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன எமிலிஜோலாவின் 'ஜெர்மினல்' என்னும் நாவல் 'சுரங்கம்', 'தப்பிப் பிறந்தவன்' என்னும் பெயர்களில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மோலியரின் 'தி நேவரி ஆஃப் ஸ்காபின்' என்னும் நாடகத்தைத் தழுவி பம்பல் சம்பந்த முதலியார் 'காளப்பன் கள்ளத்தனம்' என்னும் நாடகத்தைப் படைத்துள்ளார். பிரெஞ்சுச் சிந்தனையாளர்கள் பலருடைய கட்டுரையை டி.என் இராமச்சந்திரன் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இத்தாலிய மொழியிலிருந்து ஹென்ரிக் இப்சனின் 'The Pillars of society', 'An enemy of the people' என்னும் இரண்டு நாடகங்களையும் கா.திரவியம் 'சமூகத்தின் தூண்கள்', 'மக்களின் பகைவன்' என்னும் பெயர்களில் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார் இவ்வாறே இத்தாலிய மொழியில் படைக்கப்பட்ட இப்சனின் 'Ghosts' என்னும் நாடகம் 'பேய்கள்' என்றும், 'The wild Duck' என்னும் நாடகம் 'காட்டுவாத்து' என்றும் துரை. அரங்கசாமியால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன. இப்சனின் 'The Doll's House' என்னும் நாடகத்தைக் கா.நா சுப்பிரமணியம் 'பொம்மையா? மனைவியா? என்னும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்

ருஷ்ய மொழியிலிருந்தும் தமிழில் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. 'சோவியத் நாட்டுக் கவிதைகள், லெனின் கவிதாஞ்சலி' ஆகிய கவிதைகளைச் சிதம்பரரகுநாதன் தமிழில் பெயர்த்துள்ளார். புஷ்கின் கதைகள் 'கீதம்' என்னும் கதைத் தொகுப்பாகத் தமிழாக்கம் பெற்றுள்ளது

அலெக்சாண்டர் குபரின் 'யாமாதிபிட்' என்னும் நாவலைப் புதுமைப்பித்தன் 'பலிபீடம்' என்னும் பெயரில் தமிழாக்கி உள்ளார். ஜப்பானிய மொழிச் சிறுகதைகளைப் புதுமைப்பித்தன் 'மணியோசை' என்னும் தலைப்பில் தொகுப்பாகத் தமிழாக்கியுள்ளார். 'யாமதாகாஷி' என்னும் ஜப்பானிய நாவலை க.அப்பாதுரை 'துன்பக்கேணி' என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்துள்ளார். 'நோகுக்சு' என்னும் ஜப்பானியக் கவிஞரின் குறும்பாடல்களைப் பாரதியார் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்

கிரேக்கமொழியின் இலக்கணத்தை ஒரு தனித்துறையாகப் பிரித்து ஆராய்வதற்கு முன்பு 'poetics' (கவிதை இயல்) என்னும் அரிய நூலை இயற்றி உலகப்புகழ் பெற்றவர் அரிஸ்டாடில், கிரேக்க மொழிகளின் தொல்காப்பியர் என்ற பெருமைக்குரிய அரிஸ்டாடிலின் 'கவிதை இயல்' இன்றளவும், இலக்கியத் திறனாய்வுத் துறைக்கு வழிகாட்டியாகப் போற்றப்படும் தகுதியுடைய நூலாகும். இந்நூல் உலகின் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு ஆர்வத்தோடு பயிலப்பட்டு வருகின்றது.

இருபத்தாறு பகுதிகளைக் கொண்ட இப்பழம்பெரும் நூலான கவிதை இயலைப் பின்னிணைப்புக்கள் உட்பட 195 பக்கங்களில் எளிய

இனிய தெள்ளிய நடையில் ஒரு சிறிதும் மயக்கமில்லாமல் தமிழாக்கம் செய்துள்ளார் அ அ மணவாளன். "மொழிபெயர்ப்பு என்பது ஒரு தனிக்கலை; கடினமான கலையுங்கூட இதற்கு இருமொழிப் புலமை மட்டும் இருந்தால் போதாது. எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்கிறோமோ அந்த மொழியைப் பேசுவோருடைய நாட்டு வரலாறு, அவர்களுடைய சமயக் கோட்பாடுகள், பழக்கவழக்கங்கள், மொழிமரபுகள் ஆகிய எல்லாவற்றைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நூல்களில் சொல்லப்பெறும் கருத்துகள், கையாளும் சொல்லாட்சிகள் ஆகிய யாவற்றையும் நமது மொழிமரபுக்கேற்றபடி கொண்டுவர முடியும். இந்த உண்மையை அ அ.மணவாளன் நன்கு அறிந்து இந்த நூலைத் தமிழ்ப்படுத்தி இருக்கிறார். (வெ.சாமிநாதசர்மா, அணிந்துரை, அ.அ மணவாளன், அரிஸ்டாடிலின் கவிதை இயல், ப 2) எனக் குறிப்பிட்டுள்ளார் வெ சாமிநாதசர்மா இந்நூலின் தமிழ் மொழி பெயர்ப்புக்கு இந்நூலிலுள்ள அடிக்குறிப்புக்கள் கூடுதலான சிறப்பைத் தருகின்றன.

## ஒப்பிலக்கியமும் மொழிபெயர்ப்பும் :

அறிவைப் பரவலாக்கம் செய்யும் பணியை மொழிபெயர்ப்பு செய்து வருகின்றது மூலமொழியின் கருத்துக்களைப் பெறுமொழியில் பெயர்த்துத் தருவதே மொழிபெயர்ப்பாகும் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி, உலகினை ஒன்றிணைக்கும் பணியைச் செய்து வருகின்றன 'இலக்கிய வளர்ச்சிக்கு', மொழிபெயர்ப்பு தனது பங்களிப்பினை ஆக்கப்பூர்வமாகச் செய்து வருகின்றது 'மொழி பெயர்ப்பு' வளர்ந்த நிலையில் இலக்கியம் குறித்த உலகப்போக்கு உலகப் பார்வையாக மாறியுள்ளது. அதனடிப்படையில் உலகமொழிகளில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் வளர்ந்து வருகின்றன

மொழிபெயர்ப்பு என்னும் 'கலை' இலக்கியப் படைப்பைக் காட்டிலும் கடினமானது. படைப்பாளியின் கற்பனைக்கேற்பப் படைப்பிலக்கியங்கள் அமையலாம். ஆனால், மொழிபெயர்ப்பு சில விதிமுறைகளுக்கு உட்பட்டது படைப்பாளியும் மொழிபெயர்ப்பாளனும் வெவ்வேறு தளங்களில் இயங்குகின்றனர் மொழிபெயர்ப்பாளன் சமூகம், பண்பாட்டுச் சூழல், மொழியமைப்பு முதலான கட்டுப்பாடுகளை மனத்தில் கொண்டு, ஒரு படைப்பாளியின் படைப்புக்களை மூலமொழியிலிருந்து பெறுமொழிக்கு *மாற்றுகின்றான்*

படைப்பிலக்கியங்களில் படைப்பாளிகளின் சுதந்திரமான கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. படைப்பாளிக்கு எவ்விதமான கட்டுப்பாடும் இல்லை மொழி பெயர்ப்பாளர்கள் தம் கருத்தைச் சுதந்திரமாக முன்வைக்க இயலாது, படைப்பாளிகளின் கருத்துக்களையே பெயர்த்துத் தருதல் வேண்டும் மொழிபெயர்ப்பாளன், தற்சார்பு மற்றும் உள்நோக்கம், சுயவிருப்பு–வெறுப்புக்களைக் கடந்து உலகப் பற்றைத் துறந்த துறவியைப் போலவே செயலாற்ற வேண்டும். ஆயினும் மொழிபெயர்ப்பு என்பதும் மற்றொரு படைப்பாக்கமே; அதில் படைப்பிலக்கியச் சுவைகளும், படைப்புக் கூறுகளும் இடம்பெறுதல் வேண்டும் வடமொழி நாவலாசிரியர் வி.எஸ்.காண்டேகரின் 'யயாதி',

'கருகிய மொட்டு' ஆகிய நாவல்களின் மூலத்தையும் வென்றிடும் வகையில் பி.ஸ்ரீ.ஆக்கித் தந்த மொழிபெயர்ப்புக்கள் அமைந்துள்ளன.

மனிதனின் பன்முகத் தேவைகள் காரணமாக மொழிபெயர்ப்பு இன்று பல துறைகளில் ஆளுமை செலுத்தினாலும் அதன் செல்வாக்கு மிகப்பழமையானதும் மிகப்பிரபலமானதும் கூட. பொதுவாகப் பழைய இலக்கியங்கள் கவிதைகளாகவே இருந்த தொடக்க காலத்தில் கவிதை மொழிபெயர்ப்பே போற்றப்பட்டது. பின்னர் இலக்கிய வகைமை வளர்ச்சி காரணமாக கவிதை, உரைநடை, புனைகதை, நாடக மொழிபெயர்ப்புக்கள் பரந்து விரிந்து வளர்ந்தது (கி.இராசா, ஒப்பிலக்கியம், ப.150) இதனால் இன்று தமிழில் ஒப்பிலக்கியப் பரப்பும் எல்லையும் பரந்து விரிந்து வளர்ந்து வருகின்றன.

## பழந்தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புக்கள்:

பழந்தமிழ் இலக்கியங்களை ஐரோப்பிய மொழிகளில் ஜி யூ.போப், ஜியார்ஜ் ஹார்ட், ஜாண்மார், கமில்ஸ்வலபில், ஈவாவில்டன் ஆகியோர் மொழிபெயர்த்துள்ளனர் தமிழ்நாட்டு அறிஞர்களில் குறுந்தொகையை நல்லாடை பாலகிருஷ்ண முதலியாரும், அகநானூற்றை அ தட்சிணாமூர்த்தியும், சங்கப் பாடல்கள் சிலவற்றை ம.இரா தங்கய்யா, அப்புஸ்வாமி ஆகியோரும் ஆங்கிலத்தில் சிறப்பாக மொழிபெயர்த்துத் தந்துள்ளனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய ஏ.கே.ராமானுஜன் சங்கப்பாடல்களை "Poems of Love and War" என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்

## ஆங்கில மொழியில் இந்திய இலக்கியங்கள் :

சாசர் காலத்திலிருந்து ஆங்கிலேய எழுத்தாளர்கள் தம் இலக்கியங்களில் இந்தியாவைப் பற்றி அங்கும் இங்கும் ஒரு சிலவிடங்களைக் குறித்துள்ளனர். இந்தியப் பண்பாடு, உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டு ஆங்கிலேயர் படைத்த இலக்கியங்களே ஆங்கிலோ–இந்திய இலக்கியங்களாகும். சர் வில்லியம் ஜோன்ஸ், லேடன், சர் எட்வின் ஆர்னால்டு ஆகிய ஆங்கிலோ–இந்திய எழுத்தாளர்கள் ஆங்கிலேய இனப்பண்பாட்டையே மேன்மைப்படுத்தி எழுதினர். பார்ஸ்டரின் "A Parsage to India", நிக்கல்ஸின் Vendict of India", ஆகிய இரு நூல்களும் ஆங்கில இலக்கியத்தில் இந்தியப் பண்பாட்டை மிக மோசமாக வெளிப்படுத்தியவை.

ஆங்கிலத்தில் இந்தியர்கள் படைத்த இலக்கியங்கள் 'இந்தோ–ஆங்கில இலக்கியம்' எனப் போற்றப்பட்டன. தாகூர், மனமோகன்கோஷ், ஸ்ரீ அரவிந்தர் படைத்த இலக்கியங்களை ஜார்ஜ் சாம்ஸன் என்பவர் 'Conscise Cambridge History of English Literature', என்ற நூலில் 'ஆங்கிலோ–இந்திய இலக்கியம்' என்ற பகுதியில் இணைத்துள்ளார். அயல்நாட்டு இலக்கியங்கள், தமிழ்மொழிபெயர்ப்பின் வாயிலாகத் தமிழ்நாட்டில் பிரபலமாயின. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இலியட், ஒடிசி ஆகிய கிரேக்கக் காப்பியங்களும், லியோ டால்ஸ்டாயின், War and Peace', மாக்சிம் கார்க்கியின் "Mother", ஆகிய நாவல்களும் தமிழ்நாட்டில் பிரபலமாயின. இதனால் அயலக இலக்கியங்கள் தமிழ் மக்களின் வரவேற்பைப் பெற்றன.

## ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சியில் மொழிபெயர்ப்பு :

மொழிபெயர்ப்பு இல்லையெனில், இன்றைய உலகமொழி இலக்கியங்களில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் இல்லையென்றே சொல்லலாம். இலக்கிய ஆர்வலர்களிடமும் ஆய்வாளர்களிடமும் மொழிபெயர்ப்பு இலக்கியங்களே, உலகமொழி இலக்கியப் படைப்புக்களை அறிமுகம் செய்தன. மொழிபெயர்ப்பினால்தான் இலக்கிய ஒப்புநோக்குச் சிந்தனை தோன்றியது. மொழிபெயர்ப்பும் ஒப்பிலக்கியமும் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளாகும் படைப்பு நோக்கும் சுவைக்கும் திறனும் கொண்ட இலக்கிய ஆய்வாளன் தன் தாய்மொழி அல்லாத பிறிதொரு மொழியைக் கற்ற படைப்பாளன் அம்மொழியின் இலக்கியச் சுவையில் ஆழ்ந்து ஈடுபடுகின்றான். அவ்விலக்கியங்களின் கருத்துக்களும் நயங்களும் அவன் உள்ளத்தை ஈர்க்கின்றன அவன் படித்த பிறமொழி இலக்கியத்தின் இலக்கிய வளங்களைத் தன் தாய்மொழியில் தரவேண்டும் என்ற வேட்கையினால் தூண்டப்பெற்று அதைத் தன் தாய்மொழியில் மொழிபெயர்க்கின்றான்.

இத்தகைய மொழிபெயர்ப்பு இலக்கியங்களை வாசிக்கும் வாசகர்கள், ஒப்பீட்டு மனநிலையில் தம் தாய்மொழி இலக்கியங்களோடு இணைத்துச் சிந்திக்கின்றனர் இத்தகைய ஒப்பீட்டின் வாயிலாக இலக்கியப் படைப்புக்களின் தரமும் தகுதியும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதுவே மொழிபெயர்ப்பின் வாயிலாக ஒர் இலக்கியப் படைப்பிற்குக் கிடைக்கும் உலக ஏற்புடைமை ஆகும்

**'யாதும் ஊரே'**

இலக்கியம் தரும் மொழி கடந்த மனித உணர்வுகளும், வாழ்வியல் விழுமியங்களுமே 'மனிதம்' போற்றும் மாண்புகளாகும். நாட்டுப் பிரிவினைகளையும், மனித இனப்பிரிவினையும் நீக்கி 'மனிதன்' என்ற பொது உணர்வு நிலையில் அணுகும்போதே 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழரின் உலகந்தழுவிய பண்பாட்டு நோக்கினை அடைய இயலும். அதற்கு வழிகாட்டுவதே மொழிபெயர்ப்பு மற்றும் ஒப்பிலக்கியத்தின் முக்கியப் பணியாகும் கிரேக்க இலக்கியங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதன் பயனாகவே, 'சங்கச் செவ்வியல்' என்னும் கருத்தாக்கம், சங்க இலக்கியத்திற்கு உயிரூட்டியுள்ளது. இதனால் தமிழில் ஒப்பிலக்கியமும் வளர்ந்து பயன்கொண்டுள்ளது

## இருமொழித் தொடர்பில் மொழிபெயர்ப்பும் ஒப்பிலக்கியமும்:

எவ்வாறாயினும், இருமொழித் தொடர்பில்தான் மொழிபெயர்ப்பு மற்றும் ஒப்பிலக்கியங்களின் நோக்கும் போக்கும்; அதன் செல்நெறிகளும் அமைந்துள்ளன வீரமாமுனிவர், எல்லீஸ் பாதிரியார், இராபர்ட் கால்டுவெல்ஸ், ஜி.யு.போப் போன்றோர் தங்கள் தாய்மொழிப்புலமை மற்றும் ஆங்கிலமொழியறிவோடு தமிழ் மொழியையும் அதன் இலக்கண இலக்கியங்களையும் ஆழமாப் பயின்றனர் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினர். தமிழ்மொழியும் இலக்கியங்களும் பிறநாட்டு இலக்கியம் மற்றும் பண்பாட்டோடு ஒத்தும் வேறுபட்டும் இயங்கும் நிலையை உலகிற்கு அறிவித்தனர். இதனைப் படித்தவர்கள் தமிழ் இலக்கியத்தைப் படிக்க விழைந்தனர்.

பழந்தமிழ் இலக்கியங்களின் இலக்கிய வளங்களை அறிந்து வியப்புற்ற ஐரோப்பியர் அவற்றைத் தத்தம் தாய்மொழிகளில் தேவைக்கேற்ப மொழி பெயர்த்தனர். திருக்குறள் உலகின் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. சிலப்பதிகாரத்தை `The Ankle Bracelet' எனவும், மணிமேகலையை 'Manimekala", என்ற பெயரிலும் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்த்தனர். இதனால் உலக இலக்கிய வரிசையில் தமிழ் இலக்கியங்களும் இடம்பெறலாயின. தமிழுக்குக் கிடைத்த இத்தகைய பெருமைக்கும் புகழுக்கும் ஒப்பிலக்கிய நோக்கும் மொழிபெயர்ப்புமே காரணங்களாகும்.

**மொழிபெயர்ப்பும் உலக இலக்கியமும் :**

பலமொழிகள், பல்வேறு பண்பாட்டுச் சூழல்கள், மதங்கள், ஒழுக்கங்கள் ஆகியனவற்றைக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் இந்திய மொழிகளின் இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஒப்பிடும்போதே 'தேசிய இலக்கியம்' என்ற கருத்தாக்கம் வடிவம் பெறுகின்றது. இதனால்தான் இந்திய மொழிகளில் தேசிய இலக்கியம் என்ற பார்வைக்கும் அவற்றிற்கிடையான ஒப்பீடுகளுக்கும் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் உதவுகின்றன. 'தேசிய இலக்கிய மரபு' என்னும் அடித்தளத்தில் நின்றே அனைத்துலக இலக்கிய மரபு தோன்றுவதை ஒப்பிலக்கிய ஆய்வுகளும், ஒப்பிலக்கியச் சிந்தனையாளர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர். இந்த அனைத்துலக இலக்கிய மரபிற்கு மொழிபெயர்ப்பே அடிப்படை என்பதை, உலக இலக்கியமாகப் பன்மொழிச் சான்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளைக் குறிப்பிடலாம்.

**மொழிபெயர்ப்பாளரும் ஒப்பிலக்கியவாதியும் :**

'ஒப்பிலக்கியம்' பன்னாட்டுப் பார்வையும் உலகநோக்கும் கொண்டது. மொழிபெயர்ப்பு, ஒப்பிலக்கிய வளர்ச்சிக்குப் பல நிலைகளில் உதவுகின்றது. ஆயினும் மொழிபெயர்ப்பு சரியாகவும் மேன்மையாகவும் அமைய, ஒப்பிலக்கியப் பின்புலம் கொண்ட ஒருவர், ஒருமொழி இலக்கியத்தைப் பிறிதொரு மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். ஏனெனில் மொழிபெயர்ப்பாளனுக்கு மூலமொழி அறிவும் பெறும்மொழி அறிவும் அவசியம் வேண்டும். வெறும் இருமொழி அறிவு மட்டும் அல்லாமல், இருமொழி இலக்கிய மரபுகள், பண்பாடுகள் ஆகியன குறித்த புரிதலும் தேவை. இத்தகைய மொழிபெயர்ப்பே ஆற்றலுடைய மொழிபெயர்ப்பாகி, ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்புடையதாக அமையும்.

***முடிவுரை:***

இவ்வாறாக, இருமொழி இலக்கியங்களின் பொதுத்தன்மைகளும், தனித்தன்மைகளும் மொழிபெயர்ப்பில் நுட்பமாக வெளிப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒப்பிலக்கிய ஆய்வுகளை ஒற்றுமை-வேற்றுமைப் பின்புலங்களில் காரண-காரியத்தோடு சரியாகச் செய்ய இயலும். கல்வி நிறுவனங்கள் (கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள்), மாணவர்களிடம் பிறமொழிகளைப் படிக்கும் ஆர்த்தைத் தூண்டுதல் வேண்டும். தாய்மொழி, பயிற்றுமொழிகளைத் தவிர உலகின் பிறமொழிகளையும் இலக்கிய மாணவர்கள் பயின்றால், மொழிபெயர்ப்புக்களாலும், ஒப்பிலக்கிய ஆய்வுகளாலும் தமிழ் இலக்கியம் உலகோர் கவனத்தைச் சென்றடையும்.

# சங்கச் செய்திகள்

07.08 2017 அன்று முற்பகல் 11 மணியளவில் வாணிதாசன் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவி பெ கிருஷ்ணவேணி தமது உரையில் "தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுவை மாநிலம் பெற்றுள்ள இடம் தனிச்சிறப்பு வாய்ந்தது நாட்டு விடுதலைக்குப் பாட்டு முழக்கமிட்ட பாரதியாருக்குப் புகலிடம் அளித்ததோடு மட்டுமின்றி புரட்சிக்கவி பாரதிதாசனுக்குப் பிறப்பிடமும் புதுவையாகும். வாணிதாசன் என்னும் புதுமைக்குயில் கூவியதும் அங்குதான். புதுவை மாநிலம் வில்லியனூரில் பிறந்த அவர் பாரதிதாசனிடம் தமிழ் பயின்றவர். தமிழ், தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் எனப் பன்மொழிப் புலமை பெற்றவர். *'தமிழச்சி', 'கொடிமுல்லை'* ஆகிய சிறு காப்பியங்களையும், *'தொடுவானம்', எழிலோவியம், 'குழந்தை இலக்கியம்'* ஆகிய கவிதை நூல்களையும் வழங்கியவர். இயற்கைப் புனைவு இவரது பாடல்களில் சிறந்து விளங்குவதால் *'தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்'* என்று பாராட்டப்பட்டவர். மயிலை சிவமுத்து அவர்களால் *'தமிழ்நாட்டுத் தாகூர்'* என்று புகழப்பட்டவர் *'கவிஞரேறு', 'பாவலர் மணி'* எனப் பல்வேறு விருதுகளைப் பெற்றவர் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர் முன்னதாக வாணிதாசன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

12 08.2017 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திங்கள் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சங்கச் செயலாளர் வழக்குரைஞர் *திருமிகு.ச மாரியப்பமுரளி* அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரிச் செயலாளர் இராணி *ந.இலட்சுமி குமரன்* சேதுபதி அவர்கள் முன்னிலை வகித்தார் *'தூண்டலும் துலங்கலும்'* என்ற தலைப்பில் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் *இரா.இளங்குமரனார்* அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அவர் தமது உரையில் 'அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் மூடிப்படுத்திருப்பவர்களை *'முகடி'* என்ற சொல்லால் வள்ளுவர் குறிப்பிடுவார். இங்கே உயர்ந்தோர், தாழ்ந்தோர் கிடையாது. எலலோரும் ஒத்தாராக விளங்க வேண்டும் அதுவே இயற்கை இயங்கியல ஆகும். உள்ளம் விரிந்தால் பகையும் உறவாகும் உள்ளம் சுருங்கினால் உறவும் பகை. இயற்கை அனைவருக்கும் பொதுவானது. அதுபோல மனிதனும் பொதுவானவனாக இருக்க வேண்டும் கண்டிப்பை விடக் கண்ணீர் பயன்படும். வள்ளலார் வாழ்க்கை அதற்கு உதாரணம் வள்ளலாருக்கு அவரது அண்ணியாரது கண்ணீர் தூண்டலானது பின் 6000 பாடலுக்கு மேல் வள்ளலார் பாடிய பாடலகள் துலங்கலானது இதைத்தான் வள்ளுவர் *'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்'* என்றார். புத்தர் பிறந்த இனம் சாட்சியர், இவர் குலத்துக்கும் கோலியர் என்ற இனத்துக்கும் இடையே பூசல் இருந்தது. எனவே புத்தர் தவமிருப்பது முக்கியமில்லை. பிறருக்கு உதவி செய்வது, பசி போக்க உதவ வேண்டும் என்று ஒரு பெண் தூண்டலால் புத்தர் துலங்கினாா. பறவைகள் பறப்பதைக் கண்டு தூண்டப்பட்டுத் தாங்களும் பறக்கலாம் எனத் துலங்கியவர்கள் ரைட் சகோதரர்கள். சிந்திப்பது மட்டும் முக்கியம் அல்ல. செயல்படுவதும் முக்கியம். சர்.ஐசக் நியூட்டன்

ஆப்பிளைப் பார்த்தார். அது மரத்தில் இருந்து கீழே விழுந்ததைக் கண்டார். ஆப்பிள் தூண்டியது புவியீர்ப்பு விசையாகத் துலங்கியது. சர் சி.வி.ராமன், ராமானுஜருக்கு மட்டும் ஆய்வு சொந்தமில்லை மற்றவர்கள் முயற்சிக்கவில்லை. *'சிந்தியுங்கள் அதற்கேற்பச் சிறகடித்துப் பறக்க முயற்சி செய்யுங்கள்'* என்றும், ஒரு சொற்பொழிவு மூலம் ஆயிரம் பேர் சிரிப்பதை விட ஐந்து பேர் சிந்தித்தால் சிறப்பானது' என்றும், குறிப்பிட்டார். முன்னதாகக் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள வரவேற்புரையும் நிகழ்ச்சியின நிறைவாக உதவிப்பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர் இந்நிகழ்வில் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தமிழார்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்

**24 08 2017** அன்று முற்பகல் **10.30** மணியளவில் நாமக்கல் கவிஞர் *வெ.இராமலிங்கம் பிள்ளை* அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது இளங்கலை முதலாமாண்டு மாணவர் *மா.அழகுவேல்* தமது உரையில் "மறுமலர்ச்சிக் கவிஞர்களின் வரிசையில் வந்த நாமக்கல் கவிஞர் ஓர் இந்தியக் கவிஞர் உவமை அழகும் உணர்ச்சியோடு இணைந்த சந்த அழகும் அமைந்த பாடல்களைத் தந்தவர். தமிழினப் பெருமையைப் பரப்பியவர். தமிழ்ப் பண்பாட்டைப் போற்றியவர். ஆயினும் மொழி, இனவெறிக்கு அப்பாற்பட்டவர். கவிஞர் தமது பாடல்களாலும் கதைகளாலும் தமிழ் இலக்கியத்திற்கு வளமூட்டியவர். கவிஞராகப் பலரால் அறியப்பட்டாலும் இவர் ஓர் ஓவியர், பாடகர், நாடக ஆசிரியர், நாவல் ஆசிரியர் எல்லாவற்றுக்கும் மேலாகத் தேசபக்தி உணர்வை எழுப்பும் பாடல்களைப் புனைந்தவர். *'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்!* என்ற இவரது வழிநடைப் பாடல் நாடெங்கும் ஒலித்த பாடலாகும். இவை மட்டுமின்றி, இவர் சென்னை மாநிலத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் சராசரித் தமிழ் மகனுக்கும் புரிகின்ற வகையில் எளிய தமிழில் புதினங்களையும், சிறுகதைகளையும் ஏராளமாக எழுதியவர். தமிழ்நாட்டின் தலைசிறந்த தேசியக் கவிஞராக விளங்கிய சுப்பிரமணிய பாரதியாரின் மறைவுக்குப்பின், தமிழில் எளிய நடையில் கவிதைகளையும், உரைநடை நூல்களையும் எழுதும் வழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தவர் நாமக்கல் கவிஞராவார். கவிஞராகப் பரிணமிக்கும் முன்பு, இராமலிங்கம் ஒரு தலைசிறந்த ஓவியக் கலைஞராக விளங்கினார் நாமக்கல் கவிஞரவர்கள் பாரதியாரை நேரில் சந்தித்த போது பாடல் ஒன்றினைப் பாடிக் காட்டினார். அதைக் கேட்டபோது பாரதியார் *'பலே பாண்டியா! நீர் ஒரு புலவன், ஐயமில்லை'* என்று கூறித் தட்டிக் கொடுத்துத் தழுவிக் கொணடார் 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' என இராஜாஜியாலும், 'காந்தியடிகளின் கொள்கைகளுக்கு ஒரு கவிக்குரல், காந்தியத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச் சங்கு அவர்' எனக் கவிஞர் பெ.தூரனாலும், 'படிக்காத பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய நடை, பாட்டைப் பாடுகிறவர்களைக் குழப்பி அல்லது திணறடிக்காத புலமை, வரலாற்று உண்மைகளை மறைக்காத வர்ணனை இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்ததே நாமக்கல் கவிஞரின் கவிதை' என டாக்டர் ம.பொ.சி அவர்களாலும் பாராட்டப்பட்டவர் நாமக்கல் கவிஞர் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நாமக்கல் கவிஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

22.08.2017 அன்று கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும் பாசிட்டிவ் ஹோமியோபதி கேர் அமைப்பும் இணைந்து நடத்திய ஒரு நாள் சிறப்பு மருத்துவ முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. சங்கச் செயலாளர் வழக்குரைஞர் *திருமிகு.ச.மாரியப்பமுரளி* அவர்கள் தலைமை தாங்கினார். முதல்வர் மற்றும் துணைமுதல்வர் அவர்கள் முன்னிலை வகித்தனர். முனைவர் *பா.நேருஜி* அவர்கள் வரவேற்புரையும் முனைவர் *மா.செல்வத்தரசி* அவர்கள் நன்றியுரையும் கூறினர். முனைவர் *பூ.பூங்கோதை* அவர்கள் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தார். முகாமில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

29.08.2017 அன்று முற்பகல் 8.00 மணியளவில் மலேசியாவில் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவ, மாணவியர் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களுடன் மலேசிய எழுத்தாளர்கள் சங்கத் தலைவர் *பி.ராஜேந்திரன், துணைத்தலைவர் ராஜன், செயலர் ரமணிதர்மன்* ஆகியோரும் வருகை புரிந்தனர். பாண்டியன் நூலகத்தில் உள்ள பழமையான ஓலைச் சுவடிகளையும், அரிய நூல்களையும் பார்வையிட்டனர். அனைவரையும் முதல்வர் *சு.விஜயன்* அவர்கள் வரவேற்றார். சங்கத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்துத் துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் விளக்கிக் கூறினார். ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் குறித்த சந்தேகங்களுக்கு நூலகர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் விளக்கம் கூறினர். *'செந்தமிழ்'* இதழ் அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மலேசிய மாணவ மாணவியருடன் செந்தமிழ்க் கல்லூரி மாணவ மாணவியர் கலந்துரையாடினர். கல்லூரி சார்பாகக் கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, சிலம்பாட்டம் மற்றும் பறையாட்டம் எனத் தமிழ்ப் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

30.08.2017 அன்று இளைஞர் தினத்தை முன்னிட்டு எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த மாரத்தான் மதுரை டாக்டர் *எம்.ஜி.ஆர்* விளையாட்டுத் திடலில் துவங்கி ஆட்சியர் அலுவலகத்தில் முடிவுற்றது. இந்நிகழ்வில் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக 34 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

31.08.2017 அன்று முற்பகல் 10.30 மணியளவில் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளங்கலை மூன்றாமாண்டு மாணவி *பெ.கார்த்திகா* தமது உரையில் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் தமிழாசிரியர், மருத்துவர், வேளாண் விஞ்ஞானி, இசை ஆய்வாளர், வீணை வித்தகர், வயலின் கலைஞர், பாடகர், கீர்த்தனை ஆசிரியர், ஓவியர், புகைப்படக் கலைஞர், சொற்பொழிவாளர், அச்சுக் கலைஞர், இசைக் கதைச் சொற்பொழிவாளர், எழுத்தாளர், இசைப் புரவலர் எனப் பல்துறை ஆளுமையாகத் திகழ்ந்தவர். இசை ஆராய்ச்சிக்காகவென்றே சங்கீத வித்யா மகாஜன சங்கம் எனும் சங்கத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர். மூன்று இசை மாநாடுகளை நடத்திக் காட்டியவர். ஆதார நூலாகவும், கருவி நூலாகவும், இசை ஆய்வாளர்களுக்கு இன்றளவும் பயன்பட்டு வரும் இசையியல் நூலான *கருணாமிர்தசாகரம்* எனும் நூலினைப் பதினைந்து ஆண்டு காலக் கடின உழைப்பில் உருவாக்கியவர் என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக *ஆபிரகாம் பண்டிதர்* அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## அக்டோபர்த் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



ம.பொ.சி
(03, அக்டோபர் 1995)



செல்வக் கேசவராய முதலியார்
(03, அக்டோபர் 1921)



பட்டுக்கோட்டை
கல்யாண சுந்தரனார்
(08, அக்டோபர் 1959)



மு. வரதராசனார்
(10, அக்டோபர் 1974)



வெள்ளக்கால் ப. சுபபிரமணிய முதலியார்
(12, அக்டோபர் 1946)



சுந்தர ராமசாமி
(15, அக்டோபர் 2005)



கண்ணதாசன்
(17, அக்டோபர் 1981)



மு. கதிரேசன் செட்டியார்
(24, அக்டோபர் 1953)


பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **வெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி



## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்,**
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY,**
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001.
Tamilnadu.

**Book Post**

பெறுநர் / To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 - 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு, மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403
அச்சிட்டோர்: **சிறீ அச்சகம்** 147, கீழவெளி வீதி, மதுரை–1.
அலைபேசி : 97894 95738